உ

கணபதிதுணை.

# புவனேந்திரன் கும்மி.

இஃது

மதுரை ஜில்லா மேலூர்த்தாலுகா பொட்டப்பட்டி யெனப்

பெயர்ப் பிரசித்தமுள்ள

புதுவை நகர்

ஸ்ரீமாந். பெரிய செம்பன் செட்டியாரவர்கள்

புத்திரன்

மலைபாண்டி செட்டியாரவர்கள்

வேண்டுகோள் கொண்டு

ஷையூர் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டரும்

புல்லத்திக் கருப்பணபிள்ளை அவர்கள் புத்திரருமாகிய

## சங்கரலிங்கம் பிள்ளையால்

இயற்றப்பெற்று

பொட்டப்பட்டி கிராமம்,

ஸ்ரீமாந். எஸ். ஏ. பெரிய ஐயா செட்டியார்

ஷை கிராம முன்சீபு ,, எம். ஏ. சின்னையா செட்டியார்

ஷை கிராமம் கர்ணம் ,, வி. இராமசாமிபிள்ளை

ஷை யூர் ,, எஸ். எம். சொக்கலிங்கச்செட்டியார்

ஷை யூர் ,, எஸ். ஆதீனம்பழகிய செட்டியார்

ஷை யூர் ,, வி. வைத்திலிங்கத் செட்டியார்

ஷை யூர் ,, வி. பழனித்துமாருக்கோன்

இவர்களது

பொருளுபகாரங்கொண்டு

மதுரை

...ரங் அச்சியந்திரசாலையில்

...பிடப்பெற்றது.

1912 [அணா 4.

O-,85 m S N.4, P
N12
14715

REGISTERED 21 NOV 1912 MADRAS

உ

கணபதி துணை.

# புவனேந்திரன் கும்மி.

இஃது

மதுரை ஜில்லா மேலூர்த்தாலூகா பொட்டப்பட்டி யெனப்
பெயர்ப் பிரசித்தமுள்ள

புதுவை நகர்

ஸ்ரீமாந். பெரிய செம்பன் செட்டியாரவர்கள்

புத்திரன்

மலைபாண்டி செட்டியாரவர்கள்

வேண்டுகோள் கொண்டு

ஷை யூர் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டரும்

புல்லத்திக் கருப்பணபிள்ளை அவர்கள் புத்திரருமாகிய

சங்கரலிங்கம் பிள்ளையால்

இயற்றப்பெற்று

பொட்டப்பட்டி கிராமம்,

ஸ்ரீமாந். எஸ். ஏ. பெரிய ஐயா செட்டியார்

ஷை கிராமமுன்சீபு ,, எம். ஏ. சின்னையா செட்டியார்

ஷை கிராமம் கர்ணம் ,, வி. இராமசாமிபிள்ளை

ஷை யூர் ,, எஸ். எம். சொக்கலிங்கச்செட்டியார்

ஷை யூர் ,, எஸ். ஆதீனம்பழகிய செட்டியார்

ஷை யூர் ,, வி. வைத்திலிங்கச் செட்டியார்

ஷை யூர் ,, வி. பழனிக்குமாரக்கோன்

இவர்களது

பொருளுபகாரங்கொண்டு

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றது.

இதன் விலை] 1912 [அணா 4.

உ

# சிறப்புக்கவிகள்.

இஃது

இராமநாதபுரம்ஜில்லா திருப்புத்தூர்த் தாலூகா சிங்கம்புணரி

மு. முத்துவடுகு உபாத்தியாயரவர்கள் ஆக்கியது.

## நேரிசை யாசிரியப்பா.

பொன்பொலி கமலப் பொற்றிருக் கருணை
யின்பொலி வுயர வேற்றிடும் புதுவைக்
கோநக ரத்தான் கொண்டலிற் கொடுக்கு
மாநக ரத்தான் வரன்முறை தண்வாக்
கண்ணிய னிமிரக் கற்றற வழிபோம்
புண்ணியன் சிறுநுதற் பூவையர் நெஞ்சிருள்
படமத னேற்ற பக்குவ னடங்கா
ருடநிதி பறித்தற முணர்த்திமற் றுதவிக்
காக்குங் குணனறக் கடைபடும் புன்சொல்
நாக்கொடு நவிலா நல்லனாய் நிகழும்
சீமான் பெரிய செம்பனாம் பெயருடைப்
பூமான் முறையிற் புரிதவத் திசையின்
வந்திசை யோச்சு மலையாண் டியெனுஞ்
சுந்தரன் பாடச் சொலியசொற் கொண்டு
தவனேந் தியபெருஞ் சத்திய ஞான
புவனேந் திரனெழில் பூண்பெருங் கதையை
யம்மிப் பார்மிசை யழகிய செந்தமிழ்க்
கும்மிப் பாவினிற் கூறிக் கொடுத்தனன்
இல்லத் தியலறம் இழுக்கா தாற்றுயர்
புல்லத் திக்கருப் பணபிள்ளை போதச்
செய்தவ மேந்திய செம்மைக் குமரன்
வெய்தவங் குயிற்றும் வினைபொத் தியவன்
பொங்கர் லிங்க பூசனைச்
சங்கர லிங்க பிள்ளையாந் தவனே.

6-785 MSN 4, P
N12

இஃது

இராமநாதபுரம் சிவகெங்கையென்னும் உபய ஸம்ஸ்தான வித்து
வான் இப்புவனேந்திர நாடகம் இயற்றிய மானகுடி விஸ்வக்ஞ
மு. முத்துக்கிருஷ்ண உபாத்தியாயரவர்கள் கனிஷ்டபுத்ரன்
சொர்ணபாரதியாரால் இயற்றியது.

வெண்பா.

புவனேந் திரவியொளி பொங்குமுல கேற்ற
புவனேந்த்ரன் கும்மி புகன்றான்—கவனமிகுங்
கங்கை குலத்துதித்தோன் காவளயோங் கும்புதுவைச்
சங்கரலிங் கம்பிள்ளை தான்.

இது

ஷை உபாத்தியாயர் ஜேஷ்டபுத்திரர்
குப்புசாமி உபாத்தியாயரால் இயற்றிய

நேரிசை வெண்பா.

தக்கபுவ னேந்திரமா றன்சரிதை யைக்குமியா
யிக்குவல யத்தி லியற்றினான்—மிக்கபுகழ்
மங்களஞ்சே ரும்புதுவை மாநகர்வாழ் கங்கைகுலச்
சங்கரலிங் கக்கவிஞன் றான்.

இது

மதுரைஜில்லா மேலூர்த்தாலூகா பொட்டப்பட்டி ஸ்ரீமான்
பெரியசெம்பன் செட்டியாரவர்கள் புத்திரரும்
இப்புவனேந்திரன் கும்மி பாடச்சொன்னவருமான
பி. எஸ். மலையாண்டி செட்டியாரவர்கள் சொல்லியது.

விருத்தம்.

நதிபதி சூழுஞ் சால நற்புவ னேந்த்ர தேயத்
ததிபதி சரிதை யைச்செந் தமிழினிற் கும்மிப் பாவாய்த்
ததிமதி யெனவ யங்கச் சாற்றினான் புதுவை வாழும்
கதிநதி குலத்து ளோன்சங் கரலிங்கக் கவிஞன் மாதோ.

இது
மதுரைஜில்லா மேலூர்த்தாலூகா சொக்கம்பட்டியிலிருக்கும்
தொந்திலிங்கபுரம் கிராமமுன்சீப்
எம். கந்தசாமிபிள்ளையவர்கள் இயற்றியது.

சீர்த்திதிக ழுவனியெலா மொருகுடைக்கீழ்த் தனியரசு செய்த தீர, பார்த்திபனும் புகழ்புவனேந் திரனுடைநற் சரிதமதைப் பண் பா யாண்டுங், கீர்த்திதிக ழக்குமியாய்ச் செந்தமிழா லேயுரைத் தான் கிளர்நா வியாவும், பூர்த்தியுறத் தெளிபுதுவைச் சங்கரலிங் கப்புலவப் புனிதன் றானே.

வெண்பா.

தால மிசைப்புவனேந் த்ரன்சரிதத் தைக்குமியா
சாலமிசைத் தேனென்வே சாற்றினான்—கோலமிசை
சங்கரலிங் கக்கரைவாய்த் தள்ளுநதி பாய்புதுவைச்
சங்கரலிங் கக்கவிரா சன்.

இது
மதுரைஜில்லா மேலூர்த்தாலூகா பொட்டப்பட்டி
ஸ்ரீமாந் மலையாண்டி செட்டியாரவர்கள் புத்ரன்
ஐயாச்சாமி செட்டியாரவர்கள் ஆக்கியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியம்.

தாலபுரந் தரனீன்ற புவனேந்த்ர காவலனற் சரிதை தன்னை
ஞாலமதி லுள்ளோர்கள் யாருமகிழ்ந் திடக்குமி நவிலச் செம்பண்
பாலமலை யாண்டிசொல விணங்கியசங் கரலிங்கம் பகர்ந்த விந்நூல்
போலவே நீல்லையென யாவர்களு மேமதித்துப் புகலு வாரே.

இது
மதுரைஜில்லா மேலூர்த்தாலூகா சொக்கம்பட்டி
போர்டு ஸ்கூல்மாஸ்டர்
எம். அருணாசலம்பிள்ளையவர்கள் சொல்லியது.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

காராரும் புதுவைநகர் தனில்வா ழுஞ்சங் கரலிங்கக் கவிஞ னெனக் கற்ற மேலோன், பாராரும் புவனேந்த்ரன் சரிதை தன்னைப்

பன்னூலெல் லாந்தெரிந்து பாரி லுள்ள, ஏராரு நாவலர்க ளிசைவ லோர்க ளெந்நூலு மிதற்குநிக ரிலையா மென்னத், தாராரும் வாணி திரு வருளி னாலே தண்டமிழாற் கும்மியெனச் சாற்றி னானால்.

இஃது

இராமநாதபுரம்ஜில்லா திருப்புத்தூர்த் தாலூகா காளைமாநகர்
எஸ். இராமசாமி செட்டியாரவர்கள் இயற்றியது.

கண்டோசர்க் கரையோபூந் தேனோ பாலோ கனியோவிஃ தெனவியந்து கருத்தி லெண்ணிக், கண்டோர்கள் மகிழ்ந்திடச்சீர்ப் புதுவை வாழுங் கங்கைகுலச் சங்கரலிங் கன்று னம்மா, பண்டோர் கால் புவனேந்த்ர நகரை நீதிப் படியரசோச் சியபார்த்தி பன்கா தையை, எண்டோளன் சரணமணிந் திசைக்கு மிப்பா வென்ன வெழி னிறைந்தொருநூ லியற்றி னானே.

உ

கணேசன்றுணை.

# புவனேந்திரன் கும்மி.

---

## விநாயகர் துதி.

### வெண்பா.

பொன்னார் புயமால் புவனேந் திரன்கதையை
யென்னாவாற் கும்மி யிசைக்கவே—முன்னுதவும்
கட்போ தகஞ்செழிக்கக் * காண்டப் புனறருமுக்
கட்போ தகச்செங் கழல். (1)

### விருத்தம்.

அன்னவஞ்சூ ழகிலமதை யறமுறையி னரசாற்றி யகலா துற்றுத், தென்னவனாய் வளர்புவனேந் திரன்சரிதை தனைக்கும்மியாச் செப்பற் கேயான், முன்னமரன் றிருவடியை முருகன்வரு முனம் வலஞ்சூழ் முதல்வ னான, பொன்னவனை யானைமுகப் புலவனை மறவாமற் போற்று வேனே. (2)

### கும்மி.

பூமாது மாமின் பொருந்தும் புயாசல
பொற்பார் புவனேந்த்ர நற்பதியான்
நாமா தருண்மிகுத் தோங்கு புவனேந்த்ர
னற்சரி தைக்கும்மி யைச்சொலவே. (1)

அந்திவண் ணன்றரு மைந்த னயிற்கரக்
கந்தன்முன் னோன்மல ரைந்துகரன்
றொந்தி வயிற்றொரு தந்த மதம்பொழி
தந்தி வதனன் பதந்துணையே. (2)

---

* காண்டம்-அகத்திய முனிவர் கமண்டலம்.

## சிவபிரான் துதி.

தீராதி தீரனாய் வந்த புவனேந்
திரன்கதை யைக்கும்மி யாயுரைக்கப்
பாராதி யண்ட முழுநிறை வான
பராபரன் றாளைப் பணிவேனால். (3)

## பரமேஸ்பரி துதி.

பொங்கு புகழ்ப்புவ னேந்த்ர நகருடைப்
பூமன் சரிதை தனைக்குமியா
யெங்குஞ் சிறப்பப் புகலுதற் கீச
னிடத்தமர் தேவி பதந்துணையே. (4)

## சுப்பிரமணியர் துதி.

மண்ணுல கெங்கும் புகழ்புவ னேந்திர
மன்னன் சரிதைக் குமியுரைக்க
விண்ணுல காதி பதிக்கா சீந்தருள்
வேலவன் றாளை மறவேனே. (5)

## மாயோன் துதி.

எண்டரு சீர்ப்புவ னேந்திரன் கும்மிக்
கிசைதரு வானென் னருகிருந்து
தண்டுளப மபுனை கொண்டல் வண்ணனெனுந்
தாமோத ரப்பெரு மாடானே. (6)

## சரசுபதி துதி.

பூமக ளுள்ள மகிழ்சிறப் பமுடி
பூண்ட புவனேந் திரன்குமிக்கே
நாமக டாளெளி பேனிழி நாவிடை
நண்ணி நயந்தர வேண்டுவனால். (7)

## அவையடக்கம்.

மங்கள மான புதுவை நகர்வளர்
மன்னவன் கன்னனோ டொத்தனணித்
துங்க வணிகர் குலதி லகமெனத்
துலங்கு வோன்சிவ பத்தியுளோன். (8)

அரிய நூற்பய னேடிதி காசங்க
ளானவை யாவு முளம்பதித்த
பெரிய செம்பன் றவம்பல செய்திடப்
பெற்றுவந் தோன்கலை கற்றுவந்தோன். (9)

மலையாண் டிப்பெயர் பூண்டவென் னண்பன்
வழுத்திய சொற்படி யிக்கும்மியை
நிலையாண் டுபரீ தாவி மேடமதி
நிட்சய மானவேழ் தேதியன்று. (10)

கன்னல் வளர்ந்துக முகினது குலை
கண்டு களிப்புட னேயுருக்கு
நன்னய மாகவே செந்நெல் வளமிகு
நற்றவந் தங்கும் புதுவையுறை. (11)

கங்கை குலந்தனில் வந்துதித் தோனற்சங்
கரலிங்க வேளென நாம முற்றோன்
செங்கதி ரோன்முன மேயிக் குவலயத்
தேமின் மினிக டிரிவதுபோல். (12)

காவினி லாடு மயிலினைக் கண்டொரு
* காலா யுதமும்வந் தாடுதல் போல்
நாவினில் வாணி கடாட்ச முளபுகழ்
நாவலர் பாவலர் தங்கண்முனம். (13)

சொற்றவிக் கும்மி தனைப்பிழை முற்றுந்
துடைத்தழ கேயத் தருவதின்றிக்
குற்ற மெனத்தள்ளி டாமைக்கு நற்குணக்
குன்றன மேலவ ரைப்பணிவேன். (14)

---

* காலாயுதம் - கோழி.

## நூல்.

பொன்னுல கம்போம் பலவளம் போதப்
புனைந்திசை யெண்டிசை யுஞ்சேர்க்கும்
நன்னக ராம்புவ னேந்த்ர புரிக்கு
நராதிப னாகவே தான்விளங்கும். (15)

தால புரந்தர னென்னும் பெயருடைச்
சக்கர வர்த்தியு மந்நாளிற்
சீல மதிமிகு மந்திரிக ளோம்ப
திற்சிறந் தபுகழ் பெற்றுவளர். (16)

தந்திரம் யுக்தி பலதெரிந் திட்ட
தலைமைச் சுமந்திர னோடிருந்து
சுந்தர மாக வரன்முறை யின்படி
சூழுற வாழ்ந்து வருநாளில். (17)

மங்கையோர் பாக னருட்டிறத் தானுயர்
மன்னனுக் குமுதன் மந்திரிக்கும்
பங்கமி லாவழ கோடுநல் லோரையிற்
பால ரிருவ ருதித்தனரே. (18)

சேய்கள் பிறந்தபின் பூமியிற் சகல
தேயத்தி லுள்ளவர் யாவர்கட்கும்
ஆய்ந்து பலபல தானங்கள் யாவு
மளித்தனர் மிக்க களிப்புடனே. (19)

வேந்தன் மகன்புவ னேந்திர னென்ன
விதித்தமைச் சன்றரு புத்திரனுக்
காய்ந்த மதியிற் சிறந்ததாற் புத்திசி
காமணி யென்னவே நாமமிட்டார். (20)

நாளொரு மேனி பொழுதொரு வண்ண
நனுக வளர்த்து வருநாளிற்
பாலொடு சாதம் புசிக்குஞ் சிறுவரைப்
பள்ளியில் வைத்திட வுள்ளமிக. (21)

தேர்ந்து தெளிவுறுந் தேசி கரைநற்
றினத்தைக் குறித்திடச் செய்ததனி
லார்ந்த மரியாதை யாவு மளித்துட
னட்சராப் பியாசமுஞ் செய்தனரே. (22)

வேந்தன் சுதனமைச் சன்சுதனு நல்வி
வேக முடன்கல்வி யாகமமுஞ்
சார்ந்த மனுநீதி சர்ஸ்திர மிதிகாசங்
சதுர்சஷ் டிகலா வித்தைகளும். (23)

தேர்ச்சியாய்க் கற்றபின் புத்தி சிகாமணி
செத்தார் பிழைத்தெழச் செய்யுமொரு
ஆச்சர்ய சீவ தாரக மந்திர
மதிக மாகத் தெரிந்தனனே. (24)

இப்படி யாக வுறைந்து வருகையி
லெண்ணிரண் டான வயது கண்டு
செப்பவொண் ணாத வரச ரமைச்சர்தஞ்
சேய்களுக் கேயர சாட்சிநல்க. (25)

ஆய்ந்து தினங்குறித் தற்குள் மேகொண்ட
அந்தரங் கத்தினைக் கேட்டல்கற்றல்
வாய்ந்த மதியமைச் சன்மக னும்புகழ்
வாய்ப்புவ னேந்திர னுந்தெரிந்து. (26)

மந்திரி மைந்தனைப் பார்த்துரைப் பான்றோழர்
வையகத் தின்னர சாட்சிநல்கச்
சிந்தை தனிலே நினைத்தவென் றந்தையுஞ்
செப்பின ரின்றுநின் றந்தையிடம். (27)

பட்டந் தரித்தால்மற் றுள்ள நகர்வளம்
பார்த்திடச் செல்வ தரிதாகு
மிட்டப் படியேநா மித்தின மேகிவந்
தின்ப முடனர சாட்சிசெய்வோம். (28)

என்றுரைத் தமொழி புத்தி சிகாமணி
யேற்றுநந் தந்தையர் பாலேகி
நன்றுரை யாடிப் புகன்றிடக் கொண்டுநாம்
நல்வளம் பார்த்திடச் செல்வமென. (29)

மாறுபா டில்லாம லேயிரு பேர்களு
மன்னவன் சமூகந் தன்னைநண்ணி
கூறும் வரம்பெற வந்து நிற் பார்முகக்
குறிப்பை யறிந்து சிறப்பகலா. (30)

மைந்தர்க ளேமுக வாட்டத் துடன்வந்த
வகையையென் முன்னுரைப் பீரென்னச்
சந்தோஷங் கொண்டு தரணிபன் பாதத்திற்
சாஷ்டாங்க மாகப் பணிந்தெழுந்து. (31)

நாடு நகர்வளங் கண்ணுற்ற பின்னர்
நடத்துவோம் நின்னர சாட்சிதனை
யீடுரை யாதிவ் வரந்தரு வாய்முன்
னிறைவ னருள்பெரு கும்மிறைவா. (32)

என்று மொழிந்து கரங்குவித் தார்மிக
வேங்கி மனத்துய ரோங்கி மன்னன்
நன்றுநன் றுமதி மந்திரிக ளேயிவர்
நவிலும் வார்த்தை தனைக்கேட்டீர். (33)

ஆய்ந்துரை செய்யு மெனவறைந் தங்கரு
மாமணிச் சிம்மா சனத்திருப்பத்
தூய்மதி மேவிய நாலவர் வேந்தற்
றெழுதுரை செய்திடு வாரரசே. (34)

பாலர்கள் சொற்ற மொழிப்படி யேதேயம்
பார்த்துவந் தால்வெகு நன்மையுண்டு
சிலர்கள் சொற்படி யேயருள் வீரெனச்
செப்பினர் மந்திரி மார்களுமே. (35)

தால புரந்தரன் கேட்டமைச் சன்றவத்
தனையன் புத்தி சிகாமணியைச்
சீல முடனரு காயழைத் தோர்மொழி
செப்புவ னிப்படி யொப்பிடவே. (36)

என்மகன் வேர்வை யொழுகு மிடந்துன்
னிரத்த மொழுகிடச் சாக்ரதையாய்
மன்மகி யூர்வளம் பார்த்து விரைவினில்
வாரு மெனவிடை கூறினனே. (37)

தாய்க ளிடமுமுத் தாரம்பெற் றுயுத
சாலை புகுந்தொளிர் வாளதனைச்
சேய்க ளிருவருங் கையிற் பிடித்துத்
திரவியம் வேண்டும் வரையிற்கொண்டு. (38)

வேந்த னமைச்சனும் வாயுவே கிமனோ
வேகி யெனுமிரு தேசிகள்மேற்
சார்ந்துடன் விஞ்சை மனுவைக்கர் ணோபதே
சஞ்செய வானிற் பறந்ததுவே. (39)

நாடு நகரம் பலகடந் துநவ
மாய வனங்க ணதிகடந்து
பாடுஞ் சுரும்பு கிளிகுயி லன்னம்
பயிலப் பெறுவனம் பார்த்திறங்கி. (40)

இன்பக் குரல்செவி யாற்கேட் டேயுளத்
தின்பம் பெருகிடத் தான்மகிழ்ந்தே
யன்பு பெருகுவண் சோலை வளங்கண்
டவணிரு வோரு முலாவுகையில். (41)

அங்கெழி லானதோர் வாவிகண் டானந்த
மாய்ப்புன லுண்டிளைப் பாறவென்றே
தங்க மிழைத்த படித்துறை சென்று
தாகந் தணித்தன ரந்நேரம். (42)

தாக விடாய்தணிந் தேபடி தன்னிலே
சந்தோஷ மாயவ ரங்கிருக்க
மோக விடாய்பின்னர் மூழ்வத னான்மன்னன்
மூட்டினா னாருயிர்த் தோழனுக்கே. (43)

புத்தி சிகாமணிப் பேருடையா யென்றன்
புத்திக் குகந்திடுஞ் சீருடையாய்
பத்தி யுடன்பதி னெட்டு வகைக்கறி
பாலனத் தோடிங்கு தான்கிடைத்தால். (44)

இன்பம தாகப் புசிக்கலா மென்றசொல்
லேற்றுட னேமதி மந்திரியும்
அன்பிற் சிறந்திடு மென்றுணை வாகட்
டுழுதுடன் கொண்டு வருவனென. (45)

தேசியின் மேலேறி விஞ்சையைச் சாற்றியே
சென்றடுத் ததங்கு மாபுரியில்
வாசியை யங்கு நிறுத்தி விசாரித்து
வந்தான்பூ வாணிபச் *சீமனைக்கு. (46)

இக்கணஞ் சோறுபா னெய்தயி ரோடுமீ
ரெட்டு வகைக்கறி தான்கூட்டித்
தக்க படியளித் தானனைக் குமனச்
சந்தோச மோடுபோன் னீவனென் றான். (47)

அம்மொழி கேட்டுப்பூ வாணிபச் சிமனைத்
தன்புட னின்ப ரசங்கு ழம்புஞ்
செம்மை யுறுசுவைக் காய்கறி யன்னமுஞ்
சீக்கிர மாய்ச்சமைத் தேயளித்தாள். (48)

வாங்கியே மந்திரி யின்சுத னும்வந்த
மார்க்க வழியினைத் தானோக்கிப்
பாங்குட னேவரும் போதி லிரவிமேற்
பக்கங் குடதிசை புக்கினதால். (49)

* சீ நீட்டல் விகாரம்.

வல்லிருண் மேவத் திரண்டுபின் னூர்ந்தெழு
மைக்குலஞ் சூழ்ந்திடி மிக்கொலிப்ப
அல்லகன் றுபுலர்ந் திட்டபின் மன்னிடத்
தங்குச்செல் வோமெனத் தங்கினனே. (50)

இங்கிதத் தோடணி மந்திரி சென்றபி
னேந்தல் மகன்புவ னேந்திரனும்
பொங்கிய வாவிக் கரையில் நடந்த
புதுமையைச் சொல்வே னிதமாக. (51)

மாவ தனையரு கோர்மரத் திற்கட்டி
வாவிப் படித்துறைக் கீழ்புறத்தே
காவின் மருவடிக் கீழாக மன்னவன்
காலை தனித்துறை வேளை தனில். (52)

தெப்பக் குளத்துள் விருந்தைந் தலையுடன்
சீறி யெழுந்து கடிக்கவரும்
சர்ப்பத்தைக் கண்டரசன்கர வாளினாற்
றுக்கி யிரண்டுதுண் டாக்கினனே. (53)

நாகரத் னமணி யோடு சீவ
ரத்ன மணியுந் தெறித்துவிழ
வேக முடன்சென் றெடுத்ததைத் தன்னொரு
வேட்டிமுன் றானை தனின் முடிந்து. (54)

யார்பிரத் தங்கமு வக்குளத் துறையின்
படியி னின்றுகை யாற் றொடவே
தேம்பது மத்தட நீர்ப்படி விட்டுச்
சென்று மறுபடிக் கீழிறங்க. (55)

தண்ணீர் படிவிட் டிறங்கு வதைக்கண்டு
தாண்டி யதிசயம் பார்க்கவென்றே
யெண்ணி யாயிரம் படி தனைத் தாண்டியுள்
ளேபுக மாளிகை யொன்று கண்டான். (56)

முன்னூறு மாளிகை தன்னி லுழைந்ததின்
முற்றுஞ் சமையல்செய் பாத்திரங்கள்
மன்னுமோர் கொப்பரை வெங்கீரைக் கண்டள்ளி
வாளிரத் தத்தைக் கழுவிக்கொண்டு. (57)

கண்டு விநோதங் களைப்பார்த் துள்ளங்
களிப்போடிங் கியாவரு மில்லையென்றே
விண்டுகொண் டேயிரண் டாவது மாளிகை
மேலர சன்மகன் போய்ப்பார்க்க. (58)

முத்துப் பவளங்கள் மாணிக்கம் பச்சைகள்
மொய்க்கு முழுநீலக் கோமேதகம்
நத்தும் பலபல மாமணி யோடுநா
னாவித மான பொருள்கள்கண்டு. (59)

மாளிகை யாகிய மூவிரு மாளிகை
மற்றிட மெங்கெங் கினுந்தேடி
யாளிபோ லாகிய மன்னன் மகனிங்
கியாவரை யுங்காண்கி லோமெனவே. (60)

ஏழாம்பொன் மாளிகை யைத்தேடி மன்ன
னின்பமாய்ப் பார்த்து வரும்போது
மேலான மஞ்சத்தின் மேலொரு கன்னிகை
மெய்க்கரந் தன்னிலே வீணைபற்றி. (61)

வாசிக்கும் போதவ ளைத்தடங் கண்ணினான்
மன்னன் மகனுமே தான்பார்த்து
மாசிகந் திட்ட கலைமக ளோவல்ல
மாரன் றிருத்தேவி யோமதியோ. (62)

மேனகை யூர்வசி யிந்திரன் பாரியோ
மேனாட்டுக் கந்தர்வர் பாரிதானோ
ஆன திலோத்தமை யோசெகன் மோகினி
யாகவந் திட்டவ ளோவமுதோ. (63)

என்று பலபல வாறாய் நினைத்தங்
கெழில்மிகு பெண்கொடி முன்னிலையிற்
சென்றா னரசன் மகன்புவ னேந்திர
செம்மலு மிக்க களிப்புடனே. (64)

மங்கையுங் கண்டிவ னாரோ பெரிய
மகராஜ தேவனோ மானிடனோ
இங்கொ ருவரறி யாவிடத் தேவந்த
தேதரவு செய்யுஞ் சோதனையோ. (65)

என்று நினைத்துமவ் வேந்திளை யாளுநீ
ராரெனக் கேட்கும்போ தவ்வரசன்
நன்றிவண் வாழுநீ யாரெனத் தேற
நபந்துளேன் சொல்லிடு வாயெனவே. (66)

சாற்றிய மாற்றந் தனைக்கேட் டேயந்தத்
தையலாள் மன்னன் றனைநோக்கிப்
போற்றிய நீர்சேளு மைந்த தலைநாகம்
போற்றும் படிகண்டாற் றீண்டிவிடும். (67)

தப்பிப் பிழைத்திடு வீரென நங்கையுஞ்
சாற்றிய வார்த்தை தனைக்கேட்டு
சப்பிர மஞ்சத்தின் மேலிருக் குங்குணை
சந்திர பூஷணி யேகேட்பாய். (68)

என்கர வாளினா லந்தமா நாகத்தை
யிரண்டு துண்டம தாய்வீழ
வன்சிரங் கொய்தே னெனமொழிந் தேயந்த
மன்னனும் ரத்தினங் காட்டிநின்றான். (69)

பையர வத்தைத் துணித்திடு வோரிந்தப்
பாரிலுண்டோ சுத்த வீரர்களுந்
தைய லெனைக்கண்டு மைய லினைக்கொண்டு
சாற்றுகி றீர்நம்ப மாட்டேனிங்கு. (70)

சேகர மாகவிம் மாளிகை யெங்குஞ்
சிதறிக் கிடக்கு மிரத்தினங்கள்
தோகையென் றென்னையே மாற்றவுமிப்படிச்
சொல்லுவ திற்பல வில்லையென. (71)

கைத்தல வாளா லறுத்திரு துண்டாகக்
கண்டு மிரத்தினங் கொண்டுவந்தேன்
செத்துக் கிடக்கு மரவத்தைப் பார்த்திடச்
சேயிழை யேவரு வாயெனவே. (72)

மன்னவன் முன்னடக் கக்கன்னி பின்சென்று
மையமண் டபத்தி னின்றரவந்
தன்னுயிர் விட்டிரு துண்டு மலைபோற்
றரையிற் கிடப்ப தெதிரேகண்டு. (73)

பையர வத்தின் றுயரகற் றவந்த
பார்த்த னிகரான பார்த்திபன்றன்
செய்ய வுருவத்தைப் பார்த்திவர் நாயகர்
தேவியும் நாமென வுண்மகிழ்ந்து. (74)

மாளிகை யிற்புக மன்னனும் பின்சென்று
மங்கைக் கரசியே யங்கசன்பூ
வாளி செயுந்துய ரால்லே மயங்கி
வருந்த விடாதின் றணைந்திடவே. (75)

இன்னமுந் தாமத மென்னசொல் வாயென
வேந்திழை யாண்மனங் காய்ந்தவள்போல்
தன்னந் தனியாகக் கன்னியர் வாழுந்
தலத்தினில் வந்து மலைந்திடவே. (76)

இந்த வசனம் பகர்ந்திட லாமோவிஃ
தேற் குமோ பார்க்குளி யார்க்குமினஞ்
சிந்தை வருந்தாமல் வந்த வழிபார்த்துச்
செல்லுவீ ரொல்லையில் வல்லவரே. (77)

என்ன வுரைத்தசொன் ஞாரா சம்போல
விருசெவிக் கேற வரசி யங்கோன்
மன்னுந் துயருற வுன்னைப் பிரிந்தடி
மங்கையே நானினி யெங்கு செல்வேன். (78)

காமலர் மஞ்சமேற் காம னிரதிபோற்
கலந்தணைந்து சுகந்தரு வாய்
மாமயி லேயெனப் பூவை யவண்முக
வாட்டத் துடன்பகர் வாளரசே. (79)

தேவியு மூன்னிலை யோமண மின்னஞ்
செயவிலை யோபின் னகர்க்கேகிற்
பாவை யரைமணஞ் செய்குவ ரேலிந்தப்
பாதகிக் காதர வேதுரைப்பீர். (80)

என்ன வரசனு மீரெண் வயதெனக்
கின்ன மணஞ்செய வில்லையடி
உன்னையல் லாதுவே றின்ன மணஞ்செய்யே
னுண்மை யுரையிது பெண்மயிலே. (81)

பட்டத்துத் தேவிநீ பெற்ற மகனுக்கென்
பார்முழு தாள முடிதரிப்பேன்
அட்டியன் றிமண மெட்டினிற் காந்தர்வ
மாக வணையெனத் தோகைமன்னன். (82)

பாதம் பணிந்து மலர்க்கரம் பற்றிப்
பணைத்த தனத்தி லணைத்தென்று
நாதரே நான்செய் பிழை பொறுத் தென்னுயி
ரட்சணை செய்வீ ரெனவுரைத்தென். (83)

ஆசைக் கிசைந்தவென் மன்னவ ரேபல
வாபர ணம்புனை தென்னவரே
மாசற்ற சித்ர வடிவழகி பெணை
மருவிக் காயப் பசிதணிப்பீர். (84)

நாகத்தி னாற்பட்ட துன்பமெ லாஞ்சென்று
நானுமக் குப்பாரி யாகவென்று
தாக முடனய னன்றெழு தினதாற்
றப்பாமல் வாய்த்திரென் பார்த்தா வாய். (85)

என்ன விருவரு மப்பொழு தேமஞ்ச
மேகி யதனு மிராதிகர்
மன்னிய காமக் கடலி லழுந்தியே
மகிழ்ந்த ணைந்தங் கிருந்துகொண்டு. (86)

நன்றெனப் பேசையில் மன்ன னுரைப்பனென்
னையகி யேமலர்ச் செந்தேனே
பொன்றிடு நாகம் வரலா றென்னவுன்
பொன்னகர் நாமம் புகறியென. (87)

மாமனு நீதி யுறைவிரிஞ் சநகர்
மாவர சன்விரிஞ் சாதிபதி
நாமவேள் காதலி காம ரசவல்லி
நங்கைபேர் பூலோக ரம்பையென. (88)

சொல்லுவர் நான்பன் னிரண்டு வயதினிற்
றோழிகள் தன்னோடு பூங்காவில்
நல்ல மலர்கள் பறித்திடச் சென்றுமே
நான்மலர் கொய்துல வுங்காலை. (89)

இந்நாகம் வந்து மருட்டி விரட்டியென்
னேந்திழை மார்களை விட்டோதுக்கி
யந்நாளில் ராவணன் சீதையைப் பற்றிய
அநியாயம் போலெனைக் கொண்டுவந்து. (90)

இம்மணி மாளிகை தன்னிலே வைத்ததென்
றியம்பி டப்புவ னேந்திர னும்
அம்மொழி கேட்டுளம் பூரித்துப் பெண்ணணங்
கைத்தழு வியங்கு வாழ்ந்திருந்தான். (91

கட்டமுது கொண்டு வருவே னெனச்சென்று
கட்டமு தகன்புலர்ந் திட்டவுடன்
பட்டணம் விட்டுப் பரியேறிச் சென்று
பாதை வழியாக மீண்டுவந்து. (92)

வாச மலர்க்கா வினைநாடி யங்கு
மன்னனைக் காணும லேயோடிப்
பாசத்தா லெங்கெங்கு மேதே டிமிகப்
பதறி நொந்து மனம்வாடி. (93)

வித்தக னேமத னொத்தவ னேசதுர்
வேதங்கள் கற்றிடுங் கொற்றவனே
யெத்திசை சென்றாயோ வெம்மிறை யேமன்ன
ரேத்திடுஞ் சோதிக் குலவிளக்கே. (94)

கான மயில்களே கண்டி ரோவனக்
காடைக ளேகிளிப் பேடைகளே
வானம் பாடிகௌ தாரிக ளேகுயில்
மாடப் புறாக்களே வண்டுகளே. (95)

சிங்கம் புலிகளே மானின மேயெழில்
சிறந்த யானை பரியினமே
யெங்கெங்குந் தேடியுங் காணே னெனக்
கேற்ற வுறுதியைச் சாற்றிடுவீர். (93)

மன்னனை விட்டுத் தனியா கப்புகழ்
மாநகர் நான்றனி யே குவனே
லென்னை யரசனெங் கேயென் றானுதற்
கேதுசைப் பேன்றென்னை மாதுளையோ. (97)

என்று பலவா றியம்பிப் புலம்பியு
மெண்ணமி ருந்துக் கண்ணீ ருகுத்தே
யன்றரிச் சந்திரன் றன்னைப் பிரிந்த
வமைச்சன் புலம்புதல் போலாக. (98)

எங்கினுந் தேடியுங் காணு மன்மனு
மேங்கித் தியங்கிப் பரித வித்து
மங்கையோர் பாகன் றனைத்தொழு துசென்றோர்
மாமரந் தன்னிற் குதிரைகண்டான். (99)

வாசி யிருக்கநம் மன்னனைக் காணுதென்
மந்திர மோயார்செய் தந்திரமோ
காசியிற் சென்று பவந்தொலைந் துவந்தாம்
காணலா மென்னக் கருத்திலுன்னி. (100)

அசுவ மிரண்டையு மொன்றா யிணைத்துத்தன்
னசுவத்தி லேறிமுன் னன்னமிட்ட
விசுவாச முள்ளபூ வாணிச்சி மாமனை
மேவியே கூவி யுரைக்கலுற்றான். (101)

ஆச்சியே நான்போய் வருமள வுமிந்த
அசுவ மிரண்டுன் னடைக்கலமே
தாழ்ச்சியி லாம லுணவளிப் பாயெனத்
தக்க பசும்பொன் மிகவீந்து. (102)

பார்த்திடு கென்றபூ வாணிபச் சியிடம்
பாங்காயோர் வார்த்தை யுரைத்திருக்கித்
தார்த்திருக் கொன்றைச் சடையின் வருகங்கை
தானடை யக்காவி வேட்டியொடு. (103)

தேகமெங் குந்திரு நீறுருத் திராக்கந்
திகழக் கண்டோர் புகழநல்வி
வேகி யமைச்சனும் யோகி நிகராக
வேக முடன்காசிக் கேகினனே. (104)

சென்றனன் புத்தி சிகாமணி யுமுன்னந்
தேவி யுடன்மகிழ்ந் தேயிருந்த
மன்றன் புலரணி மன்னவன் செய்கையை
வழுத்து வேன்சிறி தானமட்டும், (105)

பூலோக ரம்பை யுடன்புவ னேந்திரன்
பூரண மாகவே கூடிவெகு
மாலோன் மகனு மிரதியு மென்னவம்
மாளிகை வாழுமோர் நாளதனில். (106)

வல்லவ ரேநீர் கலவி தனில்வென்றீர்
மன்னு சதுரங்கந் தன்னிலெனை
வெல்ல முடியா தெனவிரு பேர்களும்
வேடிக்கை யாய்விரித் தாடலுற்றார். (107)

காவல ரேயிதோ பாரும் பரியினைக்
கட்டிக்கா லாளையும் வெட்டிவிட்டேன்
மேவும் பகடையும் யானடித் தேனிங்கு
வெற்றிபெற் றேனென்றன் கொற்றவரே. (108)

என்னசொன் னபடி யின்னா சேயின்ன
மெடுத்துக் கட்டுவாய் நீவிரசே
மன்னுஞ் சகட்டினை யானடித் தேனுன்
வளர்பரி யானையை யும்பிடித்தேன். (109)

மன்னரே யின்னமும் பாரு மொரு
மந்திரிக் கும்மோசம் வந்ததென்றாள்
என்ன வுரைத்தசொற் கேட்டு மயங்கியவ்
வேந்தனு மூர்ச்சையாய் வீழ்ந்தனனே. (110)

சேயிழை யாளும் பதறித் திடுக்கிட்
டெழுந்து திகைத்துவிண் மங்கையர்செய்
மாயமோ யாரணி யாயமோ மன்னர்முன்
வந்த விடந்தனில் மந்திரியை. (111)

தப்பவிட் டிங்குவந் தாரோ வெனப்பன்னீர்
தன்னைத் தெளித்து முகந்துடைத்துச்
செப்பிளங் கொங்கையாள் வீசிசிறிற் கக்கனை
தெவிந்து மந்திரீ யெனவெழுந்தான். (112)

சோகம் விலகியம் மன்னனுங் கண்ணீர்
சொரியச் சொரிய வேதுயரச்
சாகரந் தன்னி லழுந்தி யிருதயந்
தயங்கி யாருயிர் மந்திரியே. (113)

ஆக்கமாய்ப் பாலனங் கொண்டு வரச்சென்ற
அன்பே மதியமைச் சன்சுதனே
நோக்கியே வந்தெனைத் தேடியே யெவ்விடம்
நொந்தனை யோவுயிர் சிந்தினையோ. (114)

பாம்பிரத் தங்கண்ணிற் கண்டர சனுயிர்
பார்தனில் விட்டும்பர் லோகமதில்
தேம்பியே சென்றதென் றெண்ணி மனது
திகைத்துயிர் விட்டனை யோவெனத்தான். (115)

சோடிமுந்த வன்றில் போல வரசனுந்
துன்புற் றிருக்கவு மன்பினுயர்
வாடு மிடைக்குயில் மன்னரே யித்துயர்
வந்தது முள்ள வரலாறும். (116)

சொல்லென வேந்தன்பின் னுடனைப் பார்த்துத்
துலங்கு மணிமாட மாளிகைகள்
எல்லவன் போலொளி வீச நிகளணி
யேழ டுக்குமுப் பரிகைகளுள். (117)

சீர்புவ னேந்திர நன்னகர் மண்மிசைச்
செங்கோல் செலுத்து மனுவேந்தன்
பேர்பெறுந் தால புரந்தர னுமெனப்
பேசிடு வாருல கோர்களுமே. (118)

நீதி யமைச்சர்க ளொப்பது பேர்களின்
நீத முதன்மந் திரியும்பிரக்
யாத னுஞ்சுமந் திராகர னுடனவர்
அம்புவி யைமுறை யானுளில். (119)

மன்னவர்க் குந்நானும் மந்திரிக் கோர்சேயும்
மாதவத் தாற்பிறந் தேவளர்ந்தோம்
நன்னுத லேநான் புவனேந்த்ர னென்னுநன்
னாமமு மந்திரி மைந்த னுந்தான். (120)

தேர்ந்துயர் புத்தி சிகாமணி யென்னச்
சிறப்புறு நாமமும் பெற்றவுடன்
வாய்ந்தெமைப் போற்றிக் கலைபல தேற்றிவில்
வாட்டொழின் முற்றி வளர்த்திடவே. (121)

மந்திரி புத்தி சிகாமணி யுஞ்செத்த
வர்க டமைப்பிழைத் தெழச்செய்யுஞ்
சுந்தர ஜீவதா ரகமந் திரத்தைத்
தொல்புவி போற்ற வறிந்திருந்தான். (122)

சிலை நிகர்புரு வத்தணங்கே நாங்கள்
தேச வளந்தனைப் பார்த்திடவே
நிலைமைய தாயிரு பேர்களும் வெற்றி
நேரும் புரவிகண் மேலேறி. (123)

தேச வளங்க டமைப்பார்த் தேமிகச்
சேர்க்கையாய்த் தாவி வரும்போது
ஆசைசெய் வாவியைக் கண்டிதிற் றண்ணீ
ரருந்தியே போவோ மெனவிறங்கி. (124)

சேலொடு சேர்ந்த விழியா ளேசலஞ்
சேர்ந்து பருகிய பின்புபசுப்
பாலொடு மன்னமிவ் வாவிவைத் துண்ணப்
படிற்சுக மெய்துமென் றேயுரைத்தேன். (125)

சொன்னதோர் வார்த்தை தனைக்கேட்டு நல்ல
சுந்தர மான பரியேறி
இந்நா ளிரவி விழுவதன் முன்னென்ற
னேந்தலை சென்றனம் பெற்றுவாரேன். (126)

என்று மொழிந்தவன் சென்ற பின்புமத
னெய்யுங் கணையான் மனம்வாடி
அன்று முதலந்த மந்திரி யைமறந்
தன்னமே யின்று வரையிருந்தேன். (127)

மாவார் கண்ணிகள் மையல் பிடித்துமோர்
மாதவ ராயினும் பேதமுற்றுப்
போவா ரென்றுபன் னூல்வழி முன்னவர்
புகன்ற வார்த்தை பிசகாமோ. (128)

மாதேயென் கண்மணி யேவெளி சென்றுநம்
மந்திரி மைந்தன் றனைத்தேடிச்
சாதனை யாகவே பார்த்து வருவோஞ்
சந்திர பிம்பமே வாவென்று. (129)

மாளிகை தன்னைக் கடந்து வெளிதனில்
மன்னனு மங்கையும் வந்துநின்று
பாவிய முள்ளதன் னன்பனைக் காணுமற்
பஞ்சபூ தங்களும் வெவ்வேறுய். (130)

தேடியெங் கெங்கினுங் காணு துமனந்
திகைக்கு மன்னனைப் பார்த்தரிவை
வாடி மயங்கவேண் டாஞ்சில நாளினம்
மந்திரி பைக்காண்போ மாளிகைக்கு. (131)

வந்திடு வீரெனக் கூடி யிருவரும்
மாளிகை யில்வாழும் நாளதனில்
சுந்தர மாகவே மையமண் டபத்திற்
சுற்றி யுலாவிநாம் வந்திடுவோம். (132)

வாராய்பெண் ணேயென மன்னனு மங்கையும்
மண்டபந் தன்னி லுலாவுகையில்
நேரும் விபத்தையிப் பாரறி யப்பின்
னிகழ்த்துவே னென்ற னகத்துளதே. (133)

வாவி தனக்கு வடகிழக் கில்வள்
மன்னும் விசய நகர்வேந்தன்
தாவியே கானக வேட்டைக ளாடிநீர்த்
தாகத்தா லுள்ளக் களைப்புடனே. (134)

சிந்தைக் கிசைந்தவென் மந்திரி யேதண்ணீர்
தேங்கி யிருக்கு மிடந்தேடி
யிந்தக் கணந்தரு வித்திடு வாய்தாக
மேயற வுண்ணுதற் கென்றுரைத்தான். (135)

மன்ன னுரைத்தசொற் கேட்டமைச் சன்கூட
வந்திடும் வீரரை யங்கிருத்தி
யுன்னத மாய்ப்பரி யேறி விரைவுட
னுல்லாச மாய்ப்புறப் பட்டனனே. (136)

செம்பு கரந்தனி லேந்தியே வாவியைத்
தேடியோர் பாரிசங் கண்டிரங்கி
அன்புட னேகுளிர்ந் திட்ட புனறனை
யாங்கவன் செம்பினி லள்ளுதற்கே. (137)

0-85MSN4P N12
147115

வாவியி னுட்குனி யும்போது மைய
யண்டப மேல்மன்னன் மங்கைநிழல்
தாவிடக் கண்டு நிமிர்ந்துபொன் மாடமேல்
தைய லரசனைப் பார்த்துநின்றான். (138)

யோசனை செய்திவ னெங்கள் வேந்தனோ
வெய்த்துணர் போதிந்தப் பெண்கொடியை
மோசத்தாற் கொண்டுவந் திங்குவைத் தானென
மொழிவதற் கொன்றுமே யையமில்லை. (139)

ஆயினும் பார்த்திடு வோமென் றமைச்சனு
மண்ணலை நோக்கி வழிகூடிப்
போயினன் மன்னவன் பாதம் பணிந்து
புகழ்ந்திடச் செம்புட னீரளித்தான். (140)

தாக மிகுத்த விஜய தரன்புனல்
தானுண் டிருக்கும் பொழுதினிலே
மோக மிகுத்திடக் கண்டதை மந்திரி
மூட்டுவான் வையத் தரசனுக்கு. (141)

மன்னுயிர் யாவையுந் தன்னுயிர் போல
மகிழ்ந்திடக் காக்கு மனுவேந்தே
விண்ணுறை கன்னியோ மண்ணுறை கன்னியோ
வேலைசூழ் வாவியிற் கண்டமின்னாள். (142)

மங்கை யழகினைக் கண்டல்லோ பாரதி
மான்மக னாவி லொளித்துவிட்டாள்
சங்கரன் கண்டு தயங்கிடு வானெனத்
தங்கினாள் கங்கை சடைமுடியில். (143)

மேனகை ரம்பை திலோத்தமை யூர்வசி
மென்மரை மாது சசிமுதலாய்
வான முறைதெய்வ கன்னி யருமிந்த
மங்கை யழகுக் கிணையாகார். (144)

யாரோ வொருவனம் மங்கையைக் கொண்டுவந்
தந்தர மானதோர் மாளிகை யிற்
சீருடன் வைத்து மகிழுகி றான்றங்கள்
செங்கழ லேற்ற வழகுபெறுன். (145)

தம்மழ கைக்கண்டா லோர்நிமிஷ மங்குத்
தங்குவ ளோவந்த மங்கைநல்லாள்
எம்மிறை யேயவர் சென்றிடு முன்னநா
மெய்திடு வோமெனச் சாற்றிநின்றான். (146)

மந்திரி சொல்லிய சொற்கேட்டு மன்னன்
மாரன் கணையால் மனம்வாடித்
தந்திரி யேநீயும் வந்த வழியாய்த்
தளத்துடன் செல்வாய் குளத்தருகே. (147)

என்றிர தத்தினிற் ருனேறி மங்கை
யிருக்குந் தானந் தனைத்தேடி
வென்றி யுடன்சென்று மண்டப மேடையின்
மேலிருப் பார்க டமைநோக்கி. (148)

மங்கை யழகா யிரத்திலோர் பங்குநம்
மந்திரி சொற்றன னில்லையென்றே
யெங்கினுஞ் சென்றொளிப் பாரென வீரரை
யேவிக் குளஞ்சுற்றிக் காவல்வைத்தான். (149)

அன்ன நடையாளிவ் வாரவா ரத்தை
யறிந்தர சேயிங்கு பார்த்திடுவீர்
முன்னமே சொன்னேனுன் கேட்டி ரோவெண
மொய்குழ லாள்மன்ன னைக்கூட்டி. (150)

தாவி யிருவரும் நீரிற் குதித்தேகித்
தங்கினர் மாளிகை யுட்புகுந்தே
காவலன் கண்டிவ ரெங்குசென் ருரெனக்
கழறு வான்மதி மந்திரியும். (151)

ஐயனே நீரிற் குதித்தொளித் தாரென
வரசன் கேட்டே யதற்குரிய
செய்யென வோடம் விடுத்துக் குளித்திடுந்
தீரரைக் கூட்டியே வாருமென. (152)

தூதனுஞ் சென்று பலவிதத் தோர்களைத்
தூண்டியே கூட்டியோர் நாழிகையில்
நீதன் கழல்பணிந் தேயவ னின்றன
னிருப னப்போ துரைக்கலுற்ருன். (153)

வாவிக்குள் ளேயொரு மன்னனு மங்கையு
மறைந்தா ரவர்தங் களைத்தேடித்
தாவிப்போய்ச் சென்றொரு நாழிகைக் குள்ளவர்
தம்மைப் பிடித்திட வேண்டுமென்ருன். (154)

சொன்ன வுடன்வலை காரரும் யாவருஞ்
சோதித்துப் பார்த்துங் கிடையாமல்
மன்னனு மாரன் கணையா லேயுடல்
வாடிப் பெருமூச்சு விட்டிருந்தான். (155)

சும்மா விருந்தநம் மன்னவ னைப்பல
துயரந் தனக்கா ளாக்கிவிட்டேன்
இம்மா திரிவரு மென்றுண ராதுநா
னின்ப முடன்புகழ்ந் தேயுரைத்தேன். (156)

பிள்ளையா ராகப் பிடித்துவைத் தேபல
பேசி யிருந்து வரும்போது
சள்ளைக் குரங்காய்ச் சமைந்த கதையெனச்
சார்ந்ததென் செய்திடு வோமெனவே. (157)

வேந்தன் வதனந் தனைநோக்கி யிந்த
வேல்விழி வில்லி னுதலாளைச்
சார்ந்துட னெட்டுத் தினத்திற் பதிக்குத்
தருவிப்பே னென்ன வுறுதிசொல்லி. (158)

வாருமென் றேபுகழ் மந்திரி வேந்தனு
மற்றுஞ் சிலர்களுங் கூட்டமதாய்ச்
சாரும் விஜய நகரினிற் சென்றுமே.
தங்கி யிருந்தனர் மாளிகையில். (159)

மன்மத னெய்யுஞ் சரத்தா லேமன
மயங்கி யேங்கி மதிகுறைந்தே
வுன்மனங் கல்லோ வுருகா தோவுயி
ருய்யும் படியெனைச் சேர்ந்திடுவாய். (160)

என்று புலம்பி மதன்கணை யாற்றின
மேக்க முற்றுமுன்னை நாளினிலே
பொன்றிய சேகனைப்போல மன்னவன்
புத்தியை மங்கைமேற் போக்கினனே. (161)

தேசமெங் கும்பறை சாற்றியே நீரில்வாழ்
சேயிழை யாடனைக் கூட்டிவந்தால்
தேச மதிலொரு பாதியும் வேண்டிய
செம்பொனு மீதுவோ மென்றறைந்தால். (162)

ஆதுநங் காரிய மென்றுரைத் தான்மந்திரி
யண்ணலுங் கேட்டு வரமளித்தான்
வாருட னேமதி மந்திரி யும்பறை
வழங்கச் சொற்றன னூரறிய. (163)

வள்ளுவன் மந்திரி சொல்லி யருளிய
வண்ணம தாகப் பறையடிக்கத்
வுள்ளூர் தன்னிலோர் பார்ப்பனத் தீயவ
ளூருட்டுப் புரட்டி மகாசமர்த்தி. (164)

(வேறு)

வெங்கிட்டம் மாளெனப் பேருடை யாளவள்
விதவை நன்மை யனுவடையாள்
பங்கிட்டா லந்தகன் காணு னேயிவள்
பார குணங்களைப் பூணுனே. (165)

வெங்கு வெனவொரு ஆண்பிளை யாமுஞ்ச
ஷிர்த்தி யெடுக்கச் செலவில்லையாந்
தங்கிய சட்டுவத் தாலடித் தாளவன்
தலையிற் புண்பட வேதுடித்தான். (166)

காசிக் கவன்சலிப் பாய்ப்போ னுளிவள்
காட்டுக் குரங்கென வேயானுள்
வாசற் பறையொலி யைக்கேட்ட மாது
மன்னன்முன் சென்றன ளேவேட்ட. (167)

மங்கையைக் கொண்டுன் வசமாக வைத்தால்
வார்த்தைப் படிசெய் நிசமாக
அங்கம் குளிர்ந்திட வேயுரைப்பா யெம
தாண்டவ னேசெலப் பொன்னிறைப்பாய். (168)

என்று வணங்கிட மன்னவ னும்புக
ழேற்கப்பொன் னீந்தனன் றென்னவனும்
நன்றுநன் றென்ன நடந்தன ளேபெரு
நாடுக ளெல்லாங் கடந்தனளே. (169)

நாவிக ளோடுசவ் வீரங்க ளும்பல
நஞ்சுட னெட்டியும் பூரங்களும்
பாவிதான் சேர்த்த பொடியோ டுதலம்
பாங்குடன் சென்றாள் துடியோடு. (170)

வாவியைக் கண்டனள் முண்டை யவள்விரை
வாகவே சென்றன ளண்டையவள்
தாவியே பொய்கைக் கரையோ ரம்வந்து
தங்கினா ளெட்டு மணிநேரம். (171)

பன்னி பெருங்குரல் விட்டழு தாள்படு
பாவினார் வஞ்சகந் தொட்டழுதாள்
பன்னிரு பருவம் பெற்றவ னேவேண்டும்
பலநற் கலைகளுங் கற்றவனே. (172)

தன்னந் தனியாக விட்டா யேயிந்தத்
தாரணி தன்னிலே பட்டாயே
மன்னர் புகழும் பெருமா னேயுயர்
மாமறை யோதும் நெறிமானே. (173)

மங்கள மான பருவம டாவுயிர்
மாய்த்ததி தென்ன கெருவமடா
சங்கையி லாதுற்ற பாக்கிய னேபல
தாரணி யோர் புகழ் யோக்கியனே. (174)

என்று புலம்பி மனம்பிரிந் தாளப்போ
தேங்கி யுருகிக்க ணீர்சொரிந்தாள்
மன்றுள் வளரெழில் மங்கை யுடன்புகழ்
வாய்த்திடு மன்னனுஞ் சங்கையுடன். (175)

வாருமென் மங்கையே மாளிகை மேலொலி
வாங்கி வருவோமோர் நாழிகையே
சேரும் புகழிரு கொங்கையு ளாய்மதன்
றேவி யனையபூஞ் செங்கையுளாய். (176)

என்று மொழியப்பின் சென்று ளேமாட
மேகி யுலாவியே நின்றுளே
பொன்றும் படிசெய்ய வந்திருந்த முண்டை
புலம்பிச் சிந்தையில் நொந்திருந்த. (177)

வார்த்தையை மன்னனுங் கேட்டன னேகேட்டு
மங்கை யிருசெவிக் கூட்டினனே
பார்த்து வருகிறேன் மாமயி லேயெனைப்
பாங்கா யனுப்புவாய் மாங்குயிலே. (178)

என்று புகன்று விடைபெற்றான் மன்னவ
னேகியே பார்ப்பனத் தீமுனுற்றான்
இன்று புலம்புவ தென்ன விதிநீயு
மித்துயர் கொள்ளயார் செய்தசதி. (179)

ஆரம்மா பேரென்ன சொல்வாயம் மாவிங்
கழும்விப ரங்களை விள்ளுசும்மா
ஊரென்ன வித்தகி சாற்றிடு வாயுன
துபய சரணத்தைப் போற்றிடுவேன். (180)

பகரு வாயெனக் கேட்டிட வேயவள்
பாசாங்கு முன்னிலு நீட்டிடவே
மிகவ டுத்துச்சென் றென்று யேயுள்ள
விபரந் தன்னைப்பு கன்றுயேல். (181)

என்னு லானமட் டும்முதவி யுனக்
கின்றே செய்வ னெனவிதவை
மின்னு முடிமன் குலக்கொழுந் தேகினை
வேண்டி யியம்புகி றேனெழுந்தே. (182)

உன்றனைப் போலொரு படைத்தனை யாவவன்
உயிர்வின் ஞடிட நொந்தேனையா
துன்றிய மாமலர் வாவியிற் ருனுயிர்
தொலைக்க வந்தனன் பாவியுமநான். (183)

என்றவள் சாற்றிடக் காவல னும்முள
மிரக்க மாகியே மாவலனும்
சென்றதோர் பிள்ளை யுடன்கூ டிமுனஞ்
செத்த கதைதனை நீநாடி. (184)

பார்த்ததுண் டாமுனம் பார்த்தன ணுந்தழல்
பாங்காய்க் குதிக்கையிற் காத்தனனும்
சீர்த்தியா யுற்ற சசிபதி யான்றேவ
தேவர் முனிவர்க் கதிபதியான். (185)

இன்னு மசோக வனந்தனி லேசீதை
யிறக்க வெண்ணு மிடந்தனிலே
நன்றனு மானுரை கேட்கலை யோநானும்
நவிலும் வார்த்தையை யேற்கலையோ. (186)

என்றனக் கன்னையாய் நீயிருப் பாயுனை
யெப்பொழு தும்மன மேவிருப்பாய்த்
தன்றன மாகவே பார்த்திடு வேனென்றான்
ருமேயநீ வந்திடு காத்திடுவேன். (187)

வாரா யெனமன்னன் கூப்பிட வேமிக
வஞ்சகத் தோடக மொப்பிடவே
நேரும் விபத்தைத் தெரியாமல் மன்ன
னேர்வழி வந்தா னறியாமல். (188)

பாவியைக் கூட்ட வழிநடந் தாளந்தப்
பார்த்திபன் பின்னுட னேதொடர்ந்தாள்
வாவிப் புனலோரஞ் சென்று ளேசலம்
வழி விடுவதைக் கண்டாளே. (189)

என்ன புதுமை யெனநினைத் தான்மடத்
தெழிலைக்கண்டு மிகப்பணைத்தான்
நன்னய மாகிய கொற்றவன் சென்றுதன்
நாயகி யிடத்திற் சொற்றனனே. (190)

மங்கையுங் கேட்டென்றன் மன்னவ னேயிந்த
மார்க்கமேன் வைத்தீரென் றன்னவனே
பங்க மிலாதநம் மாளிகைக் குள்ளொரு
பங்கமும் வைத்தீரோர் நாழிகைக்குள். (191)

வையக முழுதுஞ் சாற்றிடு வாளந்த
மன்ன னிடம்போயுந் தூற்றிடுவாள்
ஐயனே யென்றிவள் பேசையி லேமன்ன
னறிந்தான் சற்பன்ன பாஷையிலே. (192)

பேதை யிவளா லொருகேடுநம்மைப்
பிடிக்கா தென்ன மனம்வாடும்
மாதென் கரத்தினா லன்னமுண்ண வேண்டு
மற்றோ ரிடமுண்ண லாகாதென்ன. (193)

நன்றென மன்னனுஞ் சம்மதிக்க வுள்ளே
நண்ணியே மூவரும் வாழ்ந்திருக்க
அன்று முதற்பழி காரி நல்லதரு
ணந்தனை யாய்ந்திருந் தாள்தேறி. (194)

இப்படி யாகப் பலநா ளில்லவ
ரிருக்கும் போது வொருநாளில்
செப்பவொண் ணாத புவனேந் திரனெண்ணெய்
தேய்த்தி ருந்தன னப்போது. (195)

மங்கையும் வேறொரு மாளிகை யில்விடம்
வைத்திருந் தாளந்த நாழிகையிற்
சிங்கமே சாப்பிடு கென்றுரைத் தாளவன்
தேவி வருகவென் றேயுரைத்தான். (196)

வைத்த ரசம்நீ யருந்திடு வாய்பாலா
வாய்வுக்கொள் ளாம லிருந்திடுவா
யுத்தமி வந்தபின் னேயருந் தென்றவ
ளோடி யொளித்துமுன் வைத்திருந்த. (197)

விடத்தின் சிமிழ்தனைத் தானெடுத் தாண்மிக
வேகமாய்க் கலந்து மேகொடுத்தாள்
தடக்கண் மன்னனு மேகுடித் தான்குடல்
தானே புரட்டுதென் றேதுடித்தான். (198)

சங்கர னையமுந் தானெடுத் தான்குகன்
தழைந்த வேங்கை வடிவெடுத்தான்
மங்கையோ டரியும் வனமுறைந் தானெழில்
வாசவன் யோனி யுடனிறைந்தான். (199)

ஆரை விட்டது தான்விதி யேவிதி
யார்க்கு முண்டிது தான்சதியே
போரை வெல்லுந் தவரா சன்னுயிர்
போக்கினன் வெற்றி மிகுபோசன். (200)

நாயக னுயிர்விண் ணுடிடவே ப்ராண
நாயகி வந்துமே தேடிடவே
மாயமுள் ளாள்மோ திரம்பறித் தாள்கர
மாற்றியே தன்கரத் திற்றரித்தாள். (201)

பூலோக ரம்பை புலம்பிட வேமுண்டை
பொய்யாயொப் பாரி விளம்பிடப்பின்
மேலான பிர்ம குலத்தோர் குணங்களை
விட்டுரைப் பாள்நல்ல கட்டுரைகள். (202)

அம்மா வுனக்கிவன் போனு லும்வேறு
ஆண்பிள்ளை வைப்பேனு னுறலுஞ்
சும்மாநீ யென்பின்னே வந்தி டடியெனச்
சொன்னுள் பலபல வந்தநொடி. (203)

மன்னன் விஜய நகர்வேந்த னொளி
மாநகர் காக்குங் குணசாந்தன்
அன்னவன் றேவி யெனவிருப் பாய்புக
ழவ்விடந் தன்னிலே நீயிருப்பாய். (204)

என்று பணித்திட வாயிழை யாள்நினைத்
தேங்கிப் புலம்பின ளென்னசெய்வாள்
அன்றவன் மந்திரி வல்லபத் தைமிகு
வறையக்கேட்டதா லுடலத்தை. (205)

மன்றல் மிகுந்தநீ ராற்றெளித் துப்பெட்டி
வைத்தடைத் தஞர்க்கட விற்குளித்துச்
சென்றதை யோகியா மற்றெளிந் தோர்மாடத்
தேவைத் தடைத்துத் திகைத்துநின்றாள். (206)

வெங்கிட்டம் மாளவ ளைக்கூட் டித்தாண்டி
வெளியில் வந்தனள் வந்தவுடன்
அங்கிய மாநக ரைத்தொடர்ந் தாள்பல
வாறு வனங்க டமைக்க டந்தாள். (207)

விஜய நகரி லழைத்துக்கொண் டேவந்து
மேளதா ளங்கள் வரவழைத்துக்
கஜரத துரக பதாதி யுடன்வெகு
களிப்பாய் மன்ன னிருக்குமிடம். (208)

கொண்டுவந் தாளவ் வரசன்முன் னேயவன்
குறித்த படிமுடித் தாளென்று
பண்டம் பதார்த்தம்பொன் றந்திடு வேன்சொன்ன
பாதி ராச்யமு மீந்திடுவேன். (209)

என்ற வுரைசெவி யுற்றாளே பொன்னு
மீயப் பலபொருள் பெற்றாளே
குன்றுநன் றென்மகன் வந்தவன்று பாதி
ராச்சியத் தைவாங்கிக் கொள்வே னென்று. (210)

பார்ப்பனி சென்றபின் மாதிட மேமன்னன்
பாங்குடன் சென்றனன் மாதிடமே
காப்பதுன் பாரமென் கண்மணி யேயெனைக்
கலந்து சேருவாய் பெண்மணியே. (211)

கெஞ்சியே மன்னனுந் தான்கேட் கவொளி
கிளரு மங்கை முகம்நோக்கு
அஞ்சியே கேட்கிறேன் ரஞ்சித மேயென்ற
னாசையைத் தீர்த்திடு மிஞ்சிதமே. (212)

என்று மொழிந்திடச் சுந்தர னும்மவ
ளொன்னிறை யேபுகழ் சுந்திரனுங்
குன்றிடுங் காந்த நிறத்தோ னேயொரு
குடைக்கு ளாளுந் திறத்தோனே. (213)

என்றனக் கேற்ற மணவா ளாபல
வேந்தல்கள் போற்றுங் கனதோளா
துன்ற வொருவரக் தானளிப் பாயது
சொல்லுவேன் கேட்டு மனங்களிப்பாய். (214)

அக்காளு ரைத்தெனக் கேற்றிடு மாபதி
யடைந்தா லரனைப் போற்றிடமா
சொன்ன துண்டுநாற் பத்தைந்து தினம்வரை
துலக்கும் விரதம் வந்ததனால். (215)

என்பதி யேயெனக் கேற்ற பொருள்பல
விழிக்கை யுடனே மாற்றமருள்
அன்பு புகழும் நகரோ ரம்மொரு
அரண்மனை கட்டி. பேதிரம். (216)

சத்திரமு மன்ன தானங்க ளும்பூரி
தாகந் தணித்திடும் பானங்களுஞ்
சித்திர மாகிய மாளிகை யேயியுந்
தேடி யருள்வாயோர் நாழிகையில்.' (217)

ஓரைந் துடனாற் பதுநாளுஞ் சென்றால்
உன்னுடன் கூடிப் பலநாளும்
சீருடன் மகிழ்வே னென்றுரைத் தாளவள்
தேடும் பொருள்பல வுந்நிறைத் தான். (218)

மங்கையும் போய்மணி மாட மதிற்றூதி
மார்களுஞ் சூழ்ந்திடக் கூடமதில்
இங்கித மாக விருந்தூகொண் டேவந்தோ
ரிருவரி லொருவர் பிரிந்ததுண்டோ. (219)

என்றுமே பூரி கொடுத்திடு வீரப்போ
தேங்கிநின் றுரைப் பிடித்திடுவீர்
நன்றுடன் கொடுவாரு மிப்புற மேயென
நவின்றிருந் தனளந் தப்புரமே. (220)

என்னவே சொல்லி யிவளிருக் கமன்ன
னேகிடு நாளெண்ணி யேயிருக்க
முன்னமந் திரிகாசி யுறைவே னென்று
மொழிந்து சென்ற கதையறைவேன். (221)

கங்கையில் மூழ்கிப் பவமாற்றிக் காசிக்
காவடி தோவின் பிஷசயேற்றி
யங்கு வருவோ ருடன்கூ டித்தன்
தன்ப னனமன்ன னைத்தேடி. (222)

சென்றுமே யெங்கினுங் காணா மன்மனந்
திகைத்துமே லொன்றுமே தோணாமல்
வென்றிகொள் மந்திரி பாதைகண் டானங்கு
வேதியர் போவதைப் பார்த்து விண்டான். (223)

தோழர்க ளேயெங்குச் செல்லுகி றீரதைச்
சுருக்க மாகவே சொல்லுவீர்நீர்
ஆழிச் சயன னருளோ ரேயென
வமைச்ச னைக்கண் டுரைப்பாரே. (224)

விசய நகராள் மன்ன வனுமொரு
மின்னைக் கொடுவந்தா னன்னவளும்
பசித்து வந்தோர் புசித்திட வேயன்னம்
பகிர்ந்து பாபம் நசித்திடவே. (225)

தெட்சணை தாம்பூல முங்கொடுத் தேதானஞ்
செய்கிறாள் நாற்பது நாள்தொடுத்தே
நச்சர வம்புணை யீச னாருள்
நண்ணு மடியர்க்கு நன்னேசரே. (226)

என்ன மறையவ ரோதி யேசெல
வீதி யிறையவன் சேதியே
யன்னகர் தன்னினு மேகி யேகேட்
டறிவோ மெனவிரை வாகியே. (227)

அந்தணர் கூட்டத் துடனடந் தாரிந்த
வமைச்சன் சேயனும் பின்றொடர்ந்தான்
வந்து விஜய நகரடுத் தானுள்ளூர்
மாமறை யோரைத் தெரிந்தெடுத்தான். (228)

அங்கோ ரிடத்தினில் மேவி னனந்த
ஐய ரிடத்தில் வினவினன்
இங்கு நடக்கும் விசேஷத்தை யாவு
மியம்பு மென்னவித் தேசத்தை. (229)

புரக்கு மன்னவ னேகியே வேட்டை
புரிந்து நீர்த்தாக மாகியே
திருக்கு ளத்துக்குச் சென்றன னங்கோர்
சேயிழை யாளையுங் கண்டனன். (230)

தன்னக ரம்வந்து சேர்ந்தன னந்தத்
தைய லினைக்கொண்டிங் கார்ந்தனர்க்
கென்னிலத் திற்பாதி யீகு வேனென
இட்டான் பறைமுறை யாகவே. (231

மோசக் காரிவெங் கிட்டர்மாளும் மன்னன்
முன்பாகச் சென்றிப் பதியாளும்
ராசனே யங்குநான் சென்றிடு வேனந்த
நங்கையைக் கொண்டிங்கு வந்திடுவேன். (232)

வேந்தனே யென்னச் செலவுபெற் றுளந்த
மெல்லி யிருக்கு மிடத்தையுற்றாள்
பாந்த முடனென்றுஞ் சேர்ந்திருந் தாளந்தப்
பாவையை மன்னன்முன் கொண்டுவந்தாள். (233)

என்று புகன்றபின் மந்திரி யும்பின்ன
ரின்பமாய் மொழிவான் தந்திரமாய்
நன்றென வேயப் பிராமணத் திமனை
நண்ணு மிடத்தை யெனக்குணர்த்தி. (234)

எத்தனை பாலர்கள் நாமமென் னவவட்
கேற்ற வுறவோர்க ளுமமென்ன
வித்தார மாகவே யன்பாக வென்னை
வேண்டியே சொல்லுவீ ரின்பாக. (235)

என்று புகன்றிட வப்போ தில்லவ
ளில்லிட மைந்தா வதுவீதி
துன்றிடு மோர்சுதன் வெங்குருவென் றுன்பசித்
துயர் மிகுத்திடும் வெங்கனென்றார். (236)

சட்டுவத் தாற்சிரத் தில்லடித் தான்மிகத்
தயங்கிக் காசி வழிபிடித்தான்
இட்ட வெறுப்புடன் சென்றன னேயவ
னின்னம் வரவில்லை யென்றனரே. (237)

மந்திரி கேட்டு மிகத்தயங் கியவர்
மாற்றந் தனைநினைத் தேமயங்கி
யிந்த விடத்தர சன்செய்தி யாவையு
மேதெரி வோமென வப்போதில். (238)

ஆயினும் பார்ப்பனி யின்மனை வாய்ச்சென்
றறிந்துணர் வோமெனவே நினைவாய்ப்
போயினன் புத்தி சிகாமணி யேபலர்
புகழ வெங்கு வெனத்தனியே. (239)

அவிர்புகழ் சூழும் விஜய பதிதனை
யடைந்த னன்விரைந் தேசுமதி
புவிபுக ழமைச்சன் சுதன்றா னந்தப்
பூசுர நாரி மனையிற் சென்றான். (240)

வேதப் பிராமணத் தியுங்கண் டாள்வெகு
வேகமாய்த் துள்ளி நடந்து சென்றாள்
நீதப் புகழிரு கண்மணி யேயென்ற
னீதனே யென்வழிச் செம்மணியே. (241)

என்று புகழ்ந்தங்கு நின்றா ளேதன
தில்லினுக் கழைத்துச் சென்றாளே
சென்றுற வோர்களு மேவந்து பார்த்துச்
செல்ல விருவரு மேமகிழ்வாய். (242)

தனித்தி ருக்கையிற் சாற்றிடு வானென்றன்
றாயேநீ சொல்லுவாய் போற்றிடுவேன்
எனத்தொன் மனையு முன்னா ளில்மிடி
யேற்றி ருந்தது மிந்நாளில். (243)

செல்வச் சிறப்பும் புகழ்ச்சிறப் பும்மணிச்
சேர்க்கைச் சிறப்பும் பெருஞ்சிறப்பும்
நல்வள மேவுஞ் சிறப்புமே ததனை
நவிலு வாயெனக் கிப்போது. (244)

என்று மொழிய வமைச்சனு மேயதற்
கேற்கக் கழறுவ ளட்சணமே
யன்றுநீ சென்றபின் னோர்தினத் தில்நம்
மரசனோர் பெண்கண் டான்வனத்தில்....... (245)

கண்டு வந்தநாள் முதலாக மன்னன்
கலங்கிப் பித்தனைப் போலாக
வண்டு மலரணி மாது தனையென்றன்
வசஞ்செய் தாற்சீமை பாதிதனை. (246)

கொடுப்பே னென்னப் பறையடிக் கக்கேட்டுக்
கூறிய காரியந் தான்முடிக்க
விடச்சி மிழ்தனை நாளெடுத் தேனந்த
மெல்லியா டங்குங் குளமடுத்தேன். (247)

வாவிப் படிக்கரை கண்டே னேபல
வாகவே யொப்பாரி விண்டேனே
கூவி யழுத குரல்கேட் டுவந்தோர்
கோமகன் சென்று னெனைக்கூட்டி. (248)

கொஞ்ச தினம்வரை யங்கிருந் துபல
குறிப்புக் காரியங் கள்தெரிந்து
கஞ்ச தனையிட் டவனைக்கொன் றேனந்த
நங்கையைக் கூட்டிவந் திங்குநின்றேன். (249)

என்ற வுரைகாதி லேற்றிட வேமந்திரி
யேங்கி யுடனதை மாற்றிடவே
நன்றுசெய் தாய்சமர்த் தேவிரித் தின்னும்
நவிலு வாயென வேசிரித்து. (250)

இன்னமுன் னம்மாள் பெருஞ்சமர்த் ததனை
யியம்பக் கேளப் படியமைத்து
மன்ன னிடம்பெண்ணை யொப்புவித்து வேண்டு
வனசன் மான மிகவேபெற்று. (251)

பாதி ராச்சியம் நீவர வும்மதைப்
பற்றிக்கொள் வேயென் றவனுறவும்
ஆதர மாகக்கொண் டேபே தந்தனை
யகற்றி யரசேயா சீர்வாதம். (252)

என்ன மொழிந்து காவலன் மனைவிட்
டேகியே வந்தே னமதுமனை
யுன்வர வையெதிர் பார்த்தே னேநமக்
குள்ள வறுமையைத் தீர்த்தேனே. (253)

ஐயா மகனேயென் கண்ணொளி யேயென
தருந்தவத் துற்ற மின்னொளியே
மெய்யாய் நவின்றே னெனப்பகர்ந் தாளங்கு
வேதியன் வேறு விடைபகர்ந்தான். (254)

அன்னையே யின்று புகன்ற விதஞ்சரி
யந்நீர் வழிவிட்ட தெந்தவிதம்
பின்னு மதையெனக் கேவிரி வாய்நீயும்
பேசிடு வாயென்ன வேவிரிவாய். (255)

சொல்லுவேனொளிரு ரத்தின மேலைத்துத்
துலங்கு மோதிரங் கைத்தலமே
வல்லமை யாக விரலேற் றியவன்
வைத்திருந் ததையா னேமாற்றி. (256)

கொண்டுவந் தேனிதோ கண்பா ராயெனக்
கொண்டு வந்து தனயனோராய்
விண்டவள் காண்பித் திதுதா னேசலம்
விலகச் செய்த ததிசயமே. (257)

என்ன வமைச்சனுங் கண்டா னேயெனக்
கீருவா யென்றுரை விண்டானே
யுன்னையல் லாதெவர்க் குத்தா னேயதை
யுதவ வைத்திருந் தேனுனே. (258)

பண்டம் பதார்த்தத் துடன்பொன் னும்மொரு
பாதி ராச்சி யமுமன்னும்
அண்டிய செல்வமுந் தேடி னேனுனக்
களிக்க வரவு நாடினேன். (259)

தருணம் பார்த்துநீ வந்தாயே பின்னர்த்
தருமே லுநீயும் பெறுவாயே
யருமை மைந்தா பொறுத்திடு வாயென
வமைச்ச னுங்கேட் டுரைத்திடுவான். (260)

அன்னையே நீயந்த மோதிரத் தையெனக்
களித்தி டாது பலவிதத்தைச்
சொன்னதி னாலென்ன முன்கா சிவெகு
தூர மில்லையே விசுவாசி. (261)

செல்லுவே னென்ன வெழுந்தா னேமுன்னை
சித்தங் கலங்கியே நொந்தாளே
தில்லுதில் லெனனக் கொடுத்தா ளேபெற்று
நேசமாய்க் கையிற் றெடுத்தானே. (262)

மின்னுங் கணையாழி பெற்றன னேயந்த
மெல்லியைக் காணவென் னுற்றனனே
அன்னையே நம்மகம் பத்திர மேயானு
மனமுண்டு வருவேன் சத்திரமே. (263)

சென்று வருவே னெனப்புகன் றனன்னை
சீக்கிரம் வாவென வேயகன் றுள்
கன்று மனதுடன் சென்றனன் வேலைக்
காரன்முன் னாக வேநின்றனன். (264)

பேதமில் லாத மறையோ ரேயிரு
பேரி லொருவர் பிரிந்திரோ
வோது மெனப்பெரு மூச்செறிந்து மந்திரி
ஒதுங்கி நின்றான் றனைமறந்து. (265)

அப்போ தரிவைமுன் னாகவே செல்லென்
றனுப்பி னன்விரை வாகவேதான்
கற்புயர் மாதிடஞ் சென்றா னேமிகு
கவலை கொண்டுமுன் னின்றானே. (266)

மங்கையும் நோக்கி யெதிராக வைத்து
மாதவ ரேறே நிசமான
திங்கு வினவுமா தென்னிட மேயுள்ள
தியம்பு வீரக மோர்திடமே. (267)

ஊரேது பேரே துரையுமெ னத்தாயே
யூரிலே தேசாந் திரியென்ன
வாரேறும் பூந்தலைத் தின்மாது மிங்கு
வந்த வகையை யெனக்கோதும். (268)

அய்யரே யென்ன வறிந்தா னேயமு
தருந்த யிங்கர் வந்தேனே
மெய்யரே கேட்க மதிமருண்டு நின்ற
விபரஞ் சொல்வீ ரெனத்திரண்டு. (269)

வந்தவர்க் கெல்லா மனமீ வோரிந்த
வார்த்தை யுரைப்ப தெனவாய்வோன்
சிந்தை மயங்கிநின் றேனல் லாதொரு
செய்கையு மென்றால் நடவாது. (270)

என்ன வமைச்சன் முகம்நோக்கி மாது
மியம்பு வாளுன் றனைப்பார்க்கில்
மன்னனை விட்டுப் பிரிந்து சென்றமதி
மந்திரி போற் றெரிகின்ற தென்றாள். (271)

மன்னன் சடமிருக் கோவிலே யோவென
மந்திரி கேட்க மனமலையா
அன்னவர் தேகந் தனைப்பத னம்பண்ணி
யங்குவைத் தேனென வேதகனம். (272)

செய்ய வறிந்தெ னதுதா யேயிறிந்
திருந்த மந்திரி யின்சேயே
தையலே யான்று ணெனவுரைக் கமிகச்
சந்தோஷங் கொண்டு டவஞ்சிறக்க. (273)

வல்லவன் மந்திரி யுடன்மங் கைசினே
வார்த்தைகள் சிற்சில பேசியங்கே
நல்லது முன்கை விரல்நீட் டுஞ்செல்ல
நன்னீர் விலகி வழிகாட்டும். (274)

மணியின் மோதிரம் வேண்டு மெனச்சென்று
வாங்கி யென கைவிரற் பூண்டேனென
அணங்கு பார்த்தசு மகிழ்ந்தன ளந்த
அமைச்சன் செயலைப்புகழ்ந்தாள். (275)

கங்குல் விடிந்தாலிக் காவல னன்மனங்
கருது வானென மாவலவன்
மங்கையைத் தூக்கியே தோளில்வைத் தானொரு
மந்திரந் தன்னை யுடன்செபித்தான். (276)

கர்வல் புரிந்திடும் வீரர் களுமயக்
கங்கொண்டு வீழவக் காலத்தினிற்
றுவியே கோட்டை மதில்தாண் டிக்குதித்
தான்மா ளிகையை யுறவேண்டி. (277)

அந்நகர் தன்னைக் கடந்தா னேபெண்
ணணங்கினைக் கூட்டி நடந்தானே
மன்னிய தங்கமா புரியினைச் சேர்ந்து
வைத்திருந் தவிரு பரியினையும். (278)

வாங்கி யிரண்டையுஞ் சேர்த்தன னந்த
மங்கையை யொன்றின் மேலேற்றினன்
பரிங்குமற் றொன்றினின் மேவினன் பெண்ணைப்
பார்த்துச: றென்னவே கூவினன். (279)

மந்திரி மாதும் பரியேற விஞ்சை
மந்திர மாசெவி கட்கேற
அந்தர மாகப் பரிநடக் கநெடு
மாநன்ய மெல்லாந்தா விக்கடக்க. (280)

வாவிப் படிக்கரை கண்டா ரேயங்கு
வாசி கனைவிட்டுச் சென்றாரே
தாவிப் புன்னைக்குட் புக்கின ரேதனித்
தமர்ந்த மாளிகை நோக்கினரே. (281)

மாளிகை யெழிலைக் கண்டுகொண் டான்புகழ்
மாதிடம் யாவையும் விண்டுகொண்டான்
யாளி நிகரான பெண்ணர சேநா
னறியச் செய்குவாய் நீவிரைவில். (282)

என்றுரைத் திட்டபின் றையனல் லாள்பல
வின்சொற்கள் பேசி யிதமாக
கண்ணுநன் றென்றனை ளுட்புகுந் தாள்வைத்த
நாயகன் பேழை தனைக்கொணர்ந் தாள். (283)

மந்திரி யின்வச மேசேர்த் தாளவ்வ
மைச்சன் றிறந்தர சைப்பார்த்தான்
புந்தி மயங்கி யகம்பதற அந்தப்
பூவையுஞ் சேர்ந்து மிகக்கதற. (284)

மன்னர்க் கரசே மலர்முக மேயொன்றன்
மன்னு வொளிவள ருஞ்சுகமே
யென்னை விட்டுநீ யிறந்தா யோவென
தேந்தலை யெங்குக் கரந்தாயோ. (285)

உன்னைவிட் டுத்தனி யாயிருந் தேனென்று
னுயிரைக் காயமாய் வைத்திருந்தேன்
என்னைவிட் டுன்னுயிர் போக்கினை யோதேவ
ரிருக்குந் தானத்தை நோக்கினையோ. (286)

இவ்வித மாகவே யரற்றிட மங்கை
யெழுந்த மைச்சனைத் தேற்றிடலுஞ்
செல்வியே கொஞ்ச மகன்றுறை வாயெனச்
செல்விழி யாளுஞ்சென் றுள்விரைவாய். (237)

ஆசா னிடந்தனி லேபடிந்த மந்த்ரம்
அன்புட னேசொல்லி யேமுடித்து
நேசன் றனைக்கண்டு மேகளித் தானெழில்
நீதனுந் தூங்கினான் போல்விழித்தான். (288)

மந்திரி யும்மாதும் போற்றிட வேயந்த
மன்னவ னும்மனந் தேற்றிடவே
தந்திர னும்புவ னேந்திர னேபல
சாற்றுவா னென்னுயிர்ச் சுந்தரனே. (289)

காகத்தா லிவ்வழி கண்டுவந் தேன்வேத
காரியா லென்னுயிர் போக்கி னொந்தேன்
மோகத்தா லுன்றனை யான்மறந் தேனினை
முன்னாலே கண்டு மனஞ்சிறந்தேன். (290)

எவ்வித மிவ்வழி கண்டிவி டம்வந்தா
யென்று ரைக்க வமைச்சனுமே
யவ்வழி கண்டது மாதி யொடுமுடி
வறைந்த னன்வெகு நீதியொடு. (291)

வித்தாரம் யாவுமே தான்கேட்க மன்னன்
விழிகோ வைக்கனி போற் சேப்பப்
புத்தி சிகாமணி கூறிட வேயந்தப்
புரவ லன்கோப மாறிடவே. (292)

சங்கையாய்ச் சாற்றுவான் மந்திரி யும்மென
தண்ணலே யென்றுபின் றந்திரமாய்
மங்கையுங் கர்ப்பமுண் டாயிருக்க நாமு
மகிழ்ந்திவ் விடத்தினிலே யிருக்க. (293)

ஆகாது தன்னகர் சேர்வதற் குவழி
யட்டியின் றிப்பாரு மென்றதற்கு
மாகா வலனுமே சம்மதித் தானந்த
மாளிகை யைப்பூட்டி முத்திரித்தான். (294)

மூவருஞ் சோலை தனையடுத் தார்மந்த்ரி
மூங்கி லொடித்தொரு தேர்தொடுத்தான்
தாவும் பரியி லிருந்தன ரேயந்தத்
தையலுந் தேரிற் பொருந்தினளே. (295)

சித்தமாய்த் தன்னகர் தேடிவந் தார்முனஞ்
செய்யப கீர்த்தி நினைத்துநொந்தார்
அத்தரு ணந்தனிற் சென்றார் கள்வட
வால மரங்கண்டு நின்றார்கள். (296)

கானல் தணியும் வரையிருந் தாரப்போ
காவல னித்திரை யும்புரிந்தான்
மானனை யாளுமம் மந்திரி யும்வெகு
மர்மமா யிருந்தார் தந்திரமாய். (297)

இங்கிவ ரிப்படி யேமகிழ்ந் துதகு
மின்ப முடனே பலபுகழ்ந்து
தங்கி யிருக்க விஜய தரன்கதை
சாற்றுகி றேனவன் வேணவரம். (298)

செய்து முடித்து மறுதின மேநல்ல
தேதி முகூர்த்த மெனமுனமே
யெய்து கொடுக்கும் படிமுடங் கல்வரைந்
தெழுதி னானும் பலவிடங்கள். (299)

நாளைத் தினமென வேகருத்தி லெண்ணி
நகர மெங்கினுஞ் சீர்திருத்தி
வேளை வருவதற் குள்ளாக மன்னன்
வேளைக் கணையினு ளுள்ளாகம். (300)

வாடித் தினகர னெப்பொழு தேவரு
வானென நொந்திட வப்பொழுதே
தேடியே மன்னன்முன் வந்தது போலொளிர்
செங்கதிர் வந்தனன் கீழ்த்திசையில். (301)

சங்கரன் றன்னைப்பூசித்தா னேபின்பு
தாதிமார் தம்மைநே சித்தந்த
மங்கையைக் கூட்டி வரவென் றனுப்பி
யணவறை யில்யாவும் வைத்திருந்தான். (302)

தாதிமார் சென்றனர் கொண்டு வரச்சென்று
தையலைப் பார்த்தன ரப்போது
மாதினைக் காணாது தேடினர் சிற்சிலர்
மன்னன் சமுகத்தி லோடிநின்றார். (303)

யாரோ வொருவன் பரதேசி னென்ன
லிராத்திரி வந்து சிலபேசிப்
பாரோ ருறங்கும் வரையிருந் தான்கண்டு
பாராது பின்பு துயின்றிருந்தோம். (304)

மங்கையை மாளிகை யிற்காணோமென்றோர்
மாது சொலமன் மதன்பாணம்
அங்கத்திற் றைத்தரற் றும்ரா ஜன்சொன்ன
தறிந்து வந்ததை யோர்மோசம். (305)

நாமொன் றிதயம் நினைத்திருக் கவீசன்
ருனேயொன் றுள்ளம் நினைத்திருக்கு
மாமென்று சொல்லும் பழமொழி போல்நமக்
கட்டியின் றிவாய்த்த தென்றுமேநாள். (306)

சாத்திரங் கற்றுணர் மந்திரி யேகேளாய்
தையல்செய்த வஞ்சந் தந்திரமே
நேற்றிர விற்பர தேசிவந்து பெண்ணை
நேயப் படுத்தி மனமகிழ. (307)

அங்கவர் தனித்துப் பேசின ராங்கேட்
டரிவை யர்மனங் கூசினராம்
தங்கியே பின்பிவர் தூங்கின ராமவர்
தந்நகர் சென்றுபோய்த் தங்கினராம். (308)

கேட்டா யோவென் றுரைத்தே யுணர்ந்தேபல
கிளர்ந்து நோக்கி மனஞ்சினந்தே
தாட்டிக மாய்ப்பர தேசியங் குச்சென்ற
சங்கதி சாற்றிடு வீரென்றான். (309)

எங்களுக் கொன்றுந் தெரியாது தாங்க
ளியம்பவு மில்லையே யப்போது
தங்களி னுக்கிணை யின்படி யேபூரி
தங்கிக் கொடுப்பவர் தங்களையே. (310)

கேட்டருள் வீரெனச் சொன்னா ரப்போது
கிளருஞ் சாந்த குணமன்னன்
நாட்ட முடன்பூரிக் காரர் தமைநோக்கி
நவின்றன னீர்பர தேசிதனை. (311)

தேன்மொழி யாளவள் தங்கு மிடத்தினிற்
சேர விட்டதே னோர்சிறிதுந்
தானினி யொன்று மறியா மல்லதன்
சங்கதி யாவு மொளியாமல். (312)

சாற்றிடு வீரெனக் கேட்டிட வேயது
சங்கதி தன்னையே மூட்டிடவே
போற்றியென் னுதனே வல்லி யவளொரு
புன்மொழி சாற்றின ளென்னவென்றால். (313)

இருவர் வந்த வரிலொரு வர்பிரிந்
தேவந்தோ ருண்டோ வெனக்கேட்டுத்
திருமுகந் தன்னைக் கண்டு விரைவினிற்
றெரிந்திங்கே கூட்டி வாருமென்றாள். (314)

நேற்றிர விற்பூரி யான்கொடுத் தேன்கண்டு
நின்றானைக் கன்னிமுன் னேவிடுத்தேன்
போற்றிநின் றானவன் கன்னிமுன் னேயங்கும்
புகன்றனன் செய்தி வெகுநேரம். (315)

முன்னடந் தபல சங்கதி கள்யாவும்
மொழிந்தெதிர் நின்று முடிவணங்கிப்
பின்னடந்த தொன்று மேயறி யேனெனப்
பேசியென் மேலோர் பிழையுமில்லை. (316)

என்று மொழிந்து பயந்தெதி ரேயிவ
னிருக்கப் பின்னு மவன்சாய்ப்பில்
நன்றுபின் னவன் றன்னை யழைத்து
நடந்த யாவு மொளியாமல். (317)

சொல்லிடு கென்றனன் மன்னவன் முன்னங்குச்
சூழ்வரி லொருவன் சொன்னானே
வல்லிவெங் கிட்டம்மாள் மைந்தனு மேநேற்று
வந்தன னென்று பகர்ந்தனரே. (318)

நேற்றுத் தினங்கண்டேன் மன்னவ னேநீயு
நேரழைத் துக்கேட்பா யன்னவனை
யாற்றிய யாவும்பாப் பாத்தியி னால்வந்
தடைந்தது வேறொன் றறியேனே. (319)

என்று பகர்ந்திட வுங்கேட்டு மன்ன
னேகி யவனையிங் குக்கூட்டி
இன்றுவா வென்று விடைகொடுக் கவவ
னேகியப் பார்ப்பினி யில்லம்புக்கு. (320)

பாதகியை யங்குக் கண்டானே மன்னன்
பகர்ந்த செய்தியை விண்டானே
காதகி யேவுன் றனைக்கூட் டிவரக்
கட்டளை யிட்டா னெனச்சாற்றி. (321)

வாவெனக் கூட்டி வந்தா னேயந்த
மன்னவன் முன்விட்டு நின்றானே
பாவுக் குடையவன் பார்த்தறை வான்வேத
பார்ப்பினி யேவிடை நீவிரைவாய். (322)

சொல்லுவா யுன்மகன் வந்தது போற்பலர்
சொல்லவுங் கேட்டேனே னென்செவியால்
நல்லது பார்த்திடத் தாலுமம் மாகூட்டி
நண்ணியே யிங்குற வேணுமம்மா. (323)

என்று மொழிந்திட வேயுரைப் பாளெம
தெந்தையே சொல்லுவே னென்விரிவாய்
மன்றல் மிகுந்தவென் பாலனு மேநேற்று
மாலையில் வந்தனன் வந்தபின்னர். (324)

சத்திரம் போயுண்டு வருவனென் றேயவன்
றன்மை யுடன்சொல்லிப் போனா னின்று
மித்திரா வின்னமுங் காணே னேயையா
மெல்லியா னான்பாவி யானேனே. (325)

என்னத் தியங்கிமன் னண்டை யுமே நின்
றிறைஞ்சிச் சொற்றனள் முன்னடையுமே
மன்னவன் கேட்டுட னேகூவி யிந்த
மண்ணிலுன் போலுண்டோ மாபாவி. (326)

பாவையை யென்னிட மொப்புவித் துப்பொன்னும்
ப்பாரினிற் யாதியும் கைப்பெற்றே
யாவ லுடன்மைந் தனையழைத் துக்கூட்டி
யனுப்பி வைத்தா யவன்பிழைத்து. (327)

வஞ்சனை யாகக்கைக் கொண்டா னேயுன்றன்
மாயத்தால் வேறிடஞ் சென்றானே
பஞ்சமா பாதகத் தன்மையை யேநீயும்
பகர்ந்திடு வாயெனக் குண்மையையே. (328)

ஏதே துரைத்தாலும் பேசாது நிற்கு
மேமனைப் போன்றாளைக் கூசாது
தீதேதுங் கூடச்சுன் னாம்பறை யில்விட்டுத்
தேக்கிக் கொளுத்திடு வீர்விரைவில். (329)

என்று மொழிந்துதன் பாலனு மேயார
சியற்ற வளித்துக் காலனுமே
வென்றிடா நல்வரம் வாங்க வரன்றனை
வேண்டுவோ மென்ன விஜயதரன். (330)

கானகஞ் சென்று கடுந்தவ முள்ளங்
களிக்கச் செய்தனன் காணவந்தோர்
வானகம் போற்றும் விஜய நகரினில்
மன்னனை நீங்கியே வந்திருந்தார். (331)

இங்கிவ னிப்படித் தாண்டி னுன்முன
மேருமூ வர்கதை தாண்டினேன்
மங்கை மடியிற் றலைவைத்து மன்னன்
மயங்கித் தூங்கின னேதனித்து. (332)

மின்னொளி யென்னக் கதிர்விரியுஞ்சத்தி
வேலை நிகர்த்திடும் வாளுருவிப்
பன்னும் பலமறை கற்றவ னப்போது
பாகத்திற் காத்தனன் கொற்றவன்முன். (333)

ஆல மரத்தடியேயிருக்க வாங்கே
யண்டரண் டப்பட்சி மேலிருக்கச்
சில முடனுய ராணும்பெண் ணுஞ்சொலுஞ்
சீர்தனைச் சாற்றுவே னுனும்பின்னும். (334)

வேறு முன்கும்மி.

ஆல மரத்தின் கிளைதனி லேயவை
யாண்பெண் ணுஞ் சேர்ந்து மகிழ்ந் தவுடன்
சில முடன்சற் பன்னபா வையினுற்
செப்பிய தாண்பற வைசிறந்தே. (335)

முன்னடந் தபல சங்கதி யையவரன்
முறையதாய்ச்சொலப் பெண்பறவை
யென்னமோ அவர்கடஞ் சிரசிற் பிர்ம
னெழுதி னானே வெனப்புகல. (336)

அன்னமே தேனே யருங்குயிலேயவ
ரடைந்த துன்பங்க ளிந்தமட்டோ
இன்ன மிருக்கிறதென்னவே பேடையு
மிசைந்து கேட்டிட ஆணியம்புப். (337)

மூவருங் கூடி யொரேவழி யாயவர்
முக்கிய பட்டணம் போம்பொழுதி
லாலதொற் னறக்காலின் மண்டபஞ் செல்கையி
லதிரொலி போலிடி வந்துவிழும். (338)

தப்பிப் பிழைத்திடிற் சொந்த நகர்சென்று
தங்கியே மன்ன னுறைநாளிற்
செப்பவொண்ணு தகீர்த் தியுள தோரைந்து
சிரத்துப் பணியின் றனயனவன். (339)

கார்க்கோ டகனென நாம முளவொரு
கட்செவி வந்தவ னுவிதனை
யார்ப்புடன் வாங்கி யேகுமென் னுசைசே
ரன்னமே யேனென்று னுனறைவேன். (340)

முன்ன மிதன்பிதா தன்னை யிவன்வெகு
மூர்க்கமாய் வாளினு லேதுணித்தான்
நன்னய மாகப் பழிக்குப் பழிபெற
நண்ணியே வந்திடு மென்றதற்பின். (341)

இத்தகை யாகிய சங்கதியைக் கேட்
டியாவரு முன்பு வெளியுரைத்தாற்
றத்த மதுமெய் கல்லுரு வாய்நின்று
தான்றப் பாரெனச் சாற்றினதே. (342)

தேவர்கள் போற்றச் சிறந்து வளர்புட்கள்
தீரனே யானென்று செப்புகிறேன்
ஆவ சியமாக வென்றனக் கேசீயு
மறிவிப் பாயெனப் பெண்கேட்கும். (343)

கல்லுரு வானு லதுவில கவொரு
காரணமில்லையா வென்றுரைக்க
வல்லமை யாகவே யாண்பற வைசாற்று
மரகத மேயென் னுருயிரே. (344)

மன்னர் குலமூத்த மைந்தன் வயதிரு
மாதமுள் ளாணைப்பெற் றோர்மனதாய்
மன்னவன் வாளினு லச்சிசு கண்டத்தை
மங்களத் தோடறுத் தேகுருதி. (345)

தன்னையக் கல்லில் வடியவிட் டாலவன்
தன்னுரு வோடு மெழுந்திருப்பான்
பொன்னே கண்ணேயெனப் பேசியவ் விரண்டும்
புறப்பட்ட தும்பர் நாடதற்கே. (346)

அண்டரண் டப்பட்சி சொன்னதெல் லாமதி
யமைச்சனு மங்கையும் கேட்டார்க
ளெண்டிசை போற்றும் புவனேந் த்ரனுரை
யிங்கித நித்திரை விட் டெழுந்தான். (347)

ஆனந்த மாகப் பரியே றிப்பதி
யடையச் செல்கையில் மண்டபத்தைத்
தானந் தவங்க ளியற்றுநா லோன்கண்டு
சாட்சியி தென்ன வுளநினைத்து. (348)

ஒற்றைக்கால் மண்டபந் தாண்டிட விஞ்சையை
யுரைத்த னன்பரிக் காதுகளி
லொற்றை யிரவியுஞ் சென்றிட வேயங்
கமைத்தபொன் மண்டபங் கீழ்விழவே. (349)

பார்த்ததை யடுத்த பட்டணஞ் சென்றவர்
பண்புட னன்று நிசியுறைந்து
சீர்த்தியாய்க் காலையிற் சொந்த நகர்க்கவை
சென்றொரு மாவனந் தங்கினர்கள். (350)

அன்றொரு தூதனை யேபிடித்தேகம
தரசன் மாளி கையைநோக்கிச்
சென்றுநின் புத்திரன் றேய வளமெலாஞ்
செனறுவந் தானென் றுரைத்திடென்றான். (351)

சொல்லவுந் தூதனு மோர்கடி கையிற்போய்ச்
சொன்னசொல் யாவையுஞ் சொல்லிநின்றான்
வல்லவன் கேட்டு மனமகிழ்ந் தேபுகழ்
மந்திரி மாரிட மேபுகன்றான. (352)

வெகுதின மாமழை யில்லா மற்பயிர்
வெளுத்து வாடிய போதுகுளிர்
தகும்பெரு நன்மழை பெய்ததின் சோகந்
தனைவிலக் கியது போலாக. (353)

கண்போ யிருந்தவர்க் கேயவர் களிரு
கண்கொடுத் தருளும் பாவனைபோல்
நம்பால ரிருவரும் வந்தன ராஞ்சென்று
நம்பனைக் கேயழைத தேவருவீர். (354)

என்றமைச் சர்க ளிடஞ்சாற் றித்தன
மேந்தலுந் தூதனுக் கேயளித்தான்
அன்றமைச் சர்களுங் கூடிப் பலவித
ஆடம் பரத்தோ டேகிரிற்சென்றார். (355)

மன்னன் மகன்சமூ கந்தனி லேவந்து
மந்திரி கள்போற்றித் தெண்டனிட்டார்
அன்னவன் புத்தி சிகாமணி யும்பணிந
தையனைப் போற்றித் தொழுதுநின்றான். (356)

அங்கனம் யாவருங் கூடிப் பலவித
அட்டகா சத்துட னேநகரிற்
றங்க முடனிர தம்யா னையிலுந்
துரக தத்திலும் வந்தனர்கள். (357)

மாநகர் தன்னிலே வாழுகின் றபல
மங்கையு மானிட ரும்பலவாய்த்
தானவ ரிருதயந் தன்னிற் றேன்றிய
சங்கதி முழுவதுஞ் சாற்றுவரால். (358)

வாழ்புவ னேந்திரன் கோனமர் மாளிகை
மகிழ்வுட னேயவர் சென்றரசன்
றளிணை மாமலர் போற்றிடப் பார்த்துத்
தலைவனு மாசனந் தானளித்தான். (359)

மங்கையுஞ் சென்றுதன் மாமியார் பாத
மருமலி மல்லிகைப் பூச்சொரிந்து
செங்கையாற் போற்றித் தொழுதிருந் தாளங்குத்
தேடியே வந்திருந் தோருஞ்சென்றூர். (360)

மன்னனு மந்திரி மார்களு நோக்கிநீர்
மண்டலஞ் சென்ற கதையாவு
நன்னய மாகவே சாற்றிடு வீரென
நவில மந்திரி யும்போற்றி. (361)

அரசனையரை மற்றவ ரைக்கண்
டகமகிழ் வாய்ப்பல மார்க்கமொடு
குரக தந்தனிற் சென்றதும் பின்னர்க்
குறைந்துயி ரதனை விட்டதுவும். (362)

மன்னனுக் குயிருண் டாக்கிய தும்பின்னர்
மாநக ரடைந்த திருக
அன்னதோ ராவினி லண்டரண் டப்பட்சி
யறைந்த சங்கதி தானுெழிய. (363)

புத்தி சிகாமணி சாற்றிடக் கேட்டுப்
புரவல னும்மதி மந்திரியு
மெத்தனை துன்பந் தனையொழித் தாரென
வெண்ணியம் மந்திரி யைப்பார்த்து. (364)

ஆதரத் தோடென்ற ஞருயி ரேயுன்ஞ
லடைந்த வின்பமே யின்பமெனச்
சாதனை யாகவே தானறைந் தேபல
தானங்க ளானமட் டும்மளித்தார். (365)

மன்னவன் பாலனு மண்டப நோக்கியே
மாதா சரணந் தனைப்பணிந்தான்
அன்னவன் புத்தி சிகாமணி யும்மடைந்
தன்னை பதந்தனை யேதுதித்தான். (366)

மங்கள மாகவே பேசியவரவர்
மாளிகை தன்னிலே வாழ்ந்திருக்கத்
துங்கஞுந் தால புரந்தர ஞருந்தன்
சுதனுக் கோர்மா ளிகையமைத்து. (367)

மைந்தன் மருமக ளோத்தனி யாயந்த
மாடந் தனில்வைத் திருந்தவந்நாள்
சுந்தரத் தோளுளன் புத்தி சிகாமணி
சொல்லிய பட்சி கதையறிந்து. (368)

பன்னளும் வந்திரு டன்னி லயல்வெகு
பாங்குடன் காத்து மனைக்குச்செல்வான்
சின்ஞ ளிவனிப் படியிருக் கப்புகழ்
தேவியு மன்னனு மஞ்சமதில். (369)

கூடிக் கலந்து மருவி யவருடை
குலைந்து தூங்கும் பொழுதிலந்த
மாடத்தில் மந்திரி வந்திருந் தானப்போ
மாசுணம் வந்த துயிர்தொலைக்க. (370)

மந்திரி கண்டுதன் வாளத ஞலது
மடிய விரண்டுதுண் டாய்த்தரித்தான்
சுந்தரி கொங்கையி லக்குரு தியொரு
துளிவிழக் கண்டுட னேகருதி. (371)

பார்த்திபன் சேர்ந்து மருவியே கொங்கைப்
பானஞ்செய் தாலுயிர் போக்குமெனச்
சீர்த்தியாக் கொங்கைமேற் சுண்டுவிரனகத்
தேசெந்நீர் சேர்த்தெடுத் தானமைச்சன். (372)

எடுத்துதன் னுகிரை யறுத்தும் பாம்பி
னிரண்டு துண்டத் தையுமெடுத்தும்
படுத்திருக் கும்மேற் கட்டியி லேவீசிப்
பாங்குடன் போடுஞ் சமயத்திலே. (373)

தேமல் படர்ந்த முலையழ கிகண்டு
தெரிந்த தால்வர லாறுசனைத்
தாமக் கருங்குழல் சோர வமைச்சனைத்
தழுவினாள் சந்தோ ஷத்துடனே. (374)

மன்னனு நித்திரை விட்டெழுந் தேயவர்
மருவுஞ் செய்கை தனைப்பார்த்தே
யென்ன புதுமை யெனநினைத் துவெளி
யேகி யமைச்சனைத் தானழைந்தான். (375)

வந்தனன் காவலன் முன்பாக வந்த
மன்னனும் பார்த்தென்றன் மந்திரியே
யிந்த மதியுனக் கேன்போன தென்ன
விசைந்து கேட்டிட மந்திரியும். (376)

அண்டரண் டப்பட்சி சாப மதைநினைந்
தறைந்திட வெண்ணம் வாராமல்
விண்டிடா துதலை யைக்கவிழ்த் தமைச்சன்
விளைந்த துன்ப நினைத்துநின்றான். (377)

பார்த்தெதிர் நிற்பவர் தம்மிடத் தில் மன்னன்
பகர்ந்து நீரிந்த மந்திரியைச்
சீர்த்திசெய் நம்மர சன்சமு கம்விடுந்
தீதெல்லாஞ் சொல்லிநீர் வாருமென்று. (378)

மங்கையின் சங்கதி யைநினைத் துமிக
வருத்த மாகத்தன் வாளெடுத்துச்
சங்கையில் லாதவ டன்சிரத் தையிதோ
தறிக்கி றேனெனக் கோபங்கொண்டு. (379)

வந்துபின் றாதுவர் மங்கையர் தம்மை
வதைப்பது தர்ம மல்லவென்றே
யந்த முடன்மறை தன்னி னவின்றன
வாகையாற் பின்னு மோசித்திருந்தான். (380)

காவலர் களுமந் தப்படி யேயொரு
கணப்பொழு திற்போ யரசனிடம்
பாவலர் போற்றிடு மந்திரி யைவிட்டுப்
பகர்ந்தன ரிந்தச் சங்கதியை. (381)

தாலி புரந்தர னுங்கேட் டுமிகச்
சந்தேக மாகத்தன் முன்னில் வைத்துச்
சால மதியினு லோசித்து நல்ல
சற்குண விற்பனு வென்றழைத்து. (382)

நடந்த சங்கதி சாற்றிடு வாயென
நயந்து கேட்டிட நாடியேமுன்
னடந்த சங்கதி தன்னை யறிந்துநன்
னுன்மறை கற்றுணர் மந்திரியும். (383)

ஒன்றும் விடைபக ராம லிருப்பதை
யோர்ந்துயர் கொற்றவ னேதுரைத்து
மின்றிவன் சாற்றுகி றுனிலே யென்றுபின்
னின்மொழி சாற்று மமைச்சர்களை. (384)

கூட்டி வருவீ ரெனவுரைத் தானங்குக்
கூட்டிவந் தாரைம் பதின்மரையுந்
தாட்டிக மோடிறை யைப்பணிந் தேயவர்
தகுந்த வாசனத் தேயிருந்தார். (385)

வேந்தனும் நோக்கிநும் புத்திர னுற்றிய
விபத்த தனையே கேளுமெனச்
சாந்தமாய்ச் சங்கதி யாவு முரைத்துநீர்
தகுந்த புத்திக ளைச்சாற்றி. (386)

மாவிரண்டு திங்கட் குள்ளாக வுண்மை
வரவழைப் பீரென வுஞ்சாற்றித்
தேவி யிருக்கு மிடஞ்சென் றுனங்குச்
சிறந்த மந்திரி மாரிருந்தார். (387)

மந்திரி மார்கள் தினந்தின மும்மறை
மார்க்கமு நீதி யெடுத்துரைத்தும்
சுந்தரன் புத்தி சிகாமணி யும்மெய்யைத்
துலங்கப் பேசா திருந்துவிட்டான். (388)

இப்படி யிவர்க ளேயிருக் கநிறைந்
தீரைந்து திங்களுந் தானாக
மைப்படி கண்ணியோ ராண்மக வைநல்ல
மாதநா ணற்றிதி யிற்பயந்தாள். (389)

சீர்புக ழும்புவ னேந்திர ராஜற்குச்
சிறந்த நற்றின மாண்குழந்தை
பேர்பெறப் பிறந்த தென்னவே சாற்றிப்
பிரபலத் தோடறந் தானளித்தார். (390)

வேந்தனுஞ் சாற்றிய நாள்வரை யறைவரை
விளம்பி யும்வெளி யாகாமல்
வாய்ந்த மதியமைச் சர்களுங் கூடி
வகுத்தனர் கண்மன்னன் முன்னிலையில். (391)

எங்களா லானமட் டுமுயன் றும்மவ
னேதொன்றுஞ் சாற்றின தாயுமில்லை
சங்கையின் னீதிப் படியவன் றன்னைநீ
தண்டிப்ப தேயற நீதியென்றார். (392)

பூமிக் கரசனுந் தான்கேட் டுப்பல
புகன்று மேவெளி யாகாததால்
நாமிவன் சேர்ந்து தழுவினு னென்று
நவின்றிடச் சந்தேக மேதுமுண்டோ. (393)

என்று பணித்துக் கொலையா ளர்வச
மீந்துநீ ரங்குக் கொலைக்க ளத்திற்
சென்றிவன் றலையைக் கொய்துவா ரும்மென்று
செப்பினன் முல புரந்தரனும். (394)

நன்றுநன் றென்னக் கொலையாளி மந்திரி
நற்றவச் சுதனைக் கைப்பிடித்துச்
சென்றனர் கொலைக்களம் நாடி யங்குச்
சிற்சில மாந்தர் மொழியலுற்றார். (395)

மன்னவ னுவியைக் காக்குங் குணத்தனை
மங்கை யிடஞ்சென்று னென்று பொய்யாய்ப்
பின்னமில் லாமலே சாற்றி யிவன்றலை
பிளக்கச் செய்தன ரென்போரும். (396)

இப்படியே யாசை வைத்திருந் தால்முன்ன
மிறந்த மன்னனைத் தானெழுப்பி
ஒப்பிடா மாநகர் கூட்டியேன் வந்தன
னுரையு நீரெனச் சொல்வோரும். (397)

இல்லை யடிதங்கா யெப்போ தும்மந்த
ஏந்தலின் கண்ணுக்குத் தோற்றுமற்
கள்ளத் தனமதாய்ச் செய்தன னென்று
கருதிடச் சாட்சியம் வேறுமுண்டோ. (398)

வல்லிரு டன்னிலேன் மன்னவன் மாளிகை
மாறுவே டத்துடன் சென்றனன் சொல
வல்லியே யென்று மியற்றவ ரும்பலர்
மனதி லுற்றதைச் சொல்வாரும். (399)

ஆகவே பற்பலர் பேசிநிற் கமன்ன
னறைந்த வுத்தர வுப்படிக்கே
யேகவே காவலன் முன்னிரு மந்திரி
யேகமாய்த் திரண்டு தேடிச்சென்றார். (400)

கொலைக்க ளந்தனிற் சென்றார்க ளங்குக்
கூறினர் கள்பல தூறினர்கள்
விளைத்ததை மந்திரி யுண்ணினைத் துந்நாமும்
வெளி விடாம லிறந்து விட்டால். (401)

நங்குலத் தார்க்கலோ விவ்வசை சார்ந்திடும்
நவில்வ துத்தம மென்னவெண்ணித்
தங்குலத் தார்களை நோக்கிப் பலவித
தக்கோர் தமைக்கூட்டி வாருமென்றான். (402)

புத்தி சிகாமணி சொற்படி யேமகிழ்
புரவலன் மற்ற யாவரையுஞ்
சித்தியாய்க் கூட்டியோர் கடிகைக்குள் வந்து
சேர்ந்தனர் மந்திரி முன்னிலையில். (403)

மாசபை யோர்க டமையிருத்தி மந்திரி
மட்டிலா வச்சபை பார்த்துரைப்பான்
நேச முடன்யானுஞ் சொல்லுகி றேனதை
நினைவாய்க் கேளுமென் சங்கதியை. (404)

என்று மொழிந்து பணிந்துமுன் னர்நாங்க
ளேகிவந் தகதை சிற்சிலவே
நன்றுண் டவற்றைச் சொல்லிடு வேனென
நண்ணி யம்மாசபை பார்த்துரைப்பான். (405)

மாநகர் நோக்கி வரும்வழி யில்லொரு
மாவிரி வாகிய வாலமரந்
தோணவே கண்டினைப் பாறிச் சென்றிடத்
துணிந்தங்கே தங்கி யிருக்கையினில். (406)

கொற்றவ னித்திரை யாயிருந் தானுனுங்
குறிப்புடன் காவல் காத்திருந்தே
னற்றைத் ததியினி லண்டரண் டப்பட்சி
ஆண்பெண் ணிரண்டங்கே கூடியன்பாய். (407)

இருந்தன சற்பன்ன பாஷையி லூலாண்புள்
ளெங்கடுன் பந்தனைச் சாற்றிடவே
வருந்திப் பெண்பற வையிவர் கட்கயன்
வகுத்தா னேசிரத் தென்றிரங்க. (408)

பிற்பட வாண்பேடை சாற்றிய கேட்டென்றன்
பெண்ணேகண் ணேயொளி மாணிக்கமே
முற்பட்ட துன்பங்க ளிந்தமட் டேநானு
மொழிகு வேன்மே லிரண்டுதத்து. (409)

கேளா யிவர்நகர் செல்லு கையிற்பழங்
கிழான வொற்றைக்கா னண்டபமெந்
நாளில் வருவா ரெனக்காத் தேயவர்
நாடிட வீழ்ந்துகிழ் மூடிவிடும். (410)

தப்பிடி னும்மிவர் சொந்த நகர்சென்று
சந்தோஷ மாகவே மங்கையருங்
கைப்பிடி நாய கனுமிருந் தேமஞ்சக்
கட்டிலின் பேரிலே தூங்குகையில். (411)

கார்க்கோ டகனெனும் பேரா வம்மிவர்
காலனாய் வந்திடு மாவிபெற
மார்க்கமாய்ப் பாம்பெதால் வந்ததென் னூலோமுன்
மைய மண்டப முறைந்திருந்த. (412)

ஐந்து சிரமுள்ள நாக மதையித
னைய னெனத்தெரி யாமலொளி
சிந்திய வாளினாற் சொன்றுவிட்டானிந்தச்
சிமான் புவனேந் திரபூமான். (413)

என்று மொழிந்த தன்படி யேகிள்ளை
யேறி வருகையில் மண்டபத்தை
யன்றுகண் டோமிறை வனரு ளாற்பிழைத்
தவ்விடம் விட்டிங்கு வந்துவிட்டோம். (414)

சொந்த நகர்வந்து தங்கி யிருக்கமுன்
சொல்லிய பட்சி கதையறிந்தே
யந்திபின் மன்னன் மனைகாத்து வேறி
யார்க்குந் தெரியாது வந்திடுவேன். (415)

இப்படி யேவெகு நாளாம் போதிவ
ரிருவ ரும்முறங் குந்தருணம்
ஒப்பிடா நாக மிறைந்து வரக்கண்
டோங்கி யிரண்டுதுண் டாய்த்தரித்தேன். (416)

வெட்டுண்ட ரத்த மொருதுளி மங்கையின்
மென்முலை தன்னிலே வேகமுடன்
கொண்டுண் டதுகண்டு யான்பயந் தரசன்
கொண்டணைத் தால்விஷ மேறுமென்று. (417)

எண்ணிக் கடைவிர லின்னுகி ராலதை
யெடுக்கக் கண்டேனைத் தான்றழுவ
நண்ணர சன்விழித் தையமுற் றென்றனை
ராஜன்முன் செல்ல விடுத்தனனே. (418)

ஈதையா மெய்பிதற் கேசாட்சி முன்ன
மிடிந்த மண்டபம் பாம்பினுடல்
நீதையா வின்னமொன் றுண்டதை யும்மிகச்
செப்புகி றேனெனத் தானுரைக்க. (419)

இவ்வகைச் சங்கதி கேட்டெவ ரும்வெளி
யிடுவ ரேலவர்க் குச்சாபஞ்
செவ்வையாய்க் கல்லுரு வாவரென்று பட்சி
செப்பின தென்றமைச் சன்னுரைத்து. (420)

மந்திரி கல்லுரு வாகிவிட் டான்மிக
மயங்கி னார்சபை யோர்களுமே
தந்திரி தான புரந்தர னும்மிகத்
தயக்க மாகி மனந்தெளிந்தான். (421)

சீர்புவ னேந்திரன் றன்மயங் கிமூர்ச்சை
தெளிந்திதை யந்தனி லேவருந்திப்
பேர்பெறும் புத்தி சிகாமணி யேயுன்மேற்
பேசினேன் பொய்யதாய் வீண்வார்த்தை. (422)

உன்பு கழையெல்லாங் கண்டுகொண் டும்வீணு
யுரைத்த னன்மதி யில்லாது
நின்னுயிர் போக்கினே னென்றுல கத்தவர்
நிட்டூர மாகவே பேசிடுவார். (423)

என்று மதிமயங் கித்தியங் கிப்பல
ரெடுத்து ரைத்ததுங் கேளாமல்
நன்றிதோ வென்னொளி வாளத னாற்கொய்து
நானுயிர் போக்குவ தேயுறுதி. (424)

என்று மொழிந்திட வங்குச் சிலர்பணி
யிறந்த துண்டடந் தனைப்பார்க்கச்
சென்றிடு வோமெனச் சாற்றிப் பலர்களுஞ்
சென்றனர் மன்னவன் மாடமதில். (425)

பாம்பி னுடறனைக் கண்டு மகிழ்ந்து
பதறி மனவி சனமாகத்
தேம்பியம் மாநகர் சென்றார் களிறை
சேயுங்க ணீர்மல் கிடப்பதறி. (426)

தேவி யிருப்பிடந் தன்னிற்சென் றேபல
செய்திகள் யாவையுந் தான்விளம்பிப்
பாவியா னென்னுயிர் போக்கிடு வேனெனப்
பட்ட மணியொளி வாளெடுத்தான். (427)

மங்கையும் பார்த்து மனங்கலங் கியென்றன்
மன்னவா யானோர் மொழியுரைப்பேன்
சங்கை யறக்கே ளெனவுரைப் பாளென்றன்
சாமியே நானன்னுட் கேட்டிருந்தேன். (428)

கல்லுரு வாவ ரெனமொழி யும்போதிற்
காதினாற் கேட்டந்தப் பேடையுமே
நல்லது சாப விமோசனஞ் சொல்லென
நகைத்துக் கேட்கவாண் பட்சிசொல்லும். (429)

மங்கையே கேட்பாயிப் பூவுல கில்லொரு
மருந்தி லாத பிணிகளுண்டோ
அங்கிய மாநக ருக்கர சனுக்கோ
ராண்சிசு வுண்டதை யன்புடனே. (430)

தந்தை தலைப்புற மும்பெற் றெடுத்த
தலைவியாந் தாயவள் காற்புறமும்
சிந்தை கலக்கமி லாது பிடித்ததன்
சிரந்த ரித்திரத் தம்வடித்தால். (431)

கல்லுருச் சென்று சுயரூ பத்துடன்
காட்டிடு வான்முன் பழையபடி
நல்லுரு வாய்விடு வானதன் பின்பெவர்
நவிலினும் வேறு சாபமில்லை. (432)

என்று மொழிந்த தண்டரண் டப்பட்சி
யென்றுரை யேயெனச் சாற்றிநின்றாள்
நன்றுநன் றென்ன நினைத்துப் புகழ்மிகு
நாயகி பேரினிற் பட்சமதாய். (433)

வழிதெரி யாது திகைத்தொரு காட்டில்
மனங்க லங்கிநிற் குஞ்சமயம்
வழியை யொருவனாற் கண்டுதன் மாநகர்
மகிழ்ந்து சென்றது போலாக. (434)

இத்தநி சொன்னதே போதுமென் றெண்ணித்தன்
னில்லவ ளுந்தானு மோர்மையுடன்
அத்தநி யேதன் குழந்தையோ டியாவரு
மடைந்த னர்கள் கொலைக்களமே. (435)

அண்டரண் டப்பட்சி சொன்னபடிசிசு
வன்னையுந் தந்தையுந் தான்பிடித்துக்
கண்டந் தன்னை யறுத்தே குருதியைக்
கல்லில் வடிய விட்டாரே. (436)

புத்தி சிகாமணி தானெழுந் தான்மகிழ்
புரவ லனையும் யாவரையும்
சித்தி யுடன்றெழு தங்குநின் றுன்சிலர்
சிறப்ப தாயங்கு வாழ்த்திநின்றார். (437)

சந்தோஷ மாயவர் முன்சாற் றிச்சிசு
சடலந் தன்னை யெடுத்தணைத்தே
யந்தகற் செற்றோன் றிருவரு ளால்மக
வாருயிர் தன்னை யெழுப்பினனே. (438)

தேவர்கள் பூமழை பெய்தார்கள் வந்து
சேர்ந்த நகரத் தவர்மகிழ்ந்தார்
கோவுடன் தந்தை யனைமகிழ்ந் தார்வந்து
கூடின யாவரு மேபுகழ்ந்தார். (439)

வாத்திய கோஷத் துடன்மகிழ்ந் தேபுகழ்
மாநகர் வந்தன ரெல்லோருஞ்
சீர்த்தி யுடன்வந்து சேர்ந்தார் பின்னகர்ச்
செம்மலும் வேண்டும் வரமளித்தான். (440)

ஆனந்தக் கடலி லாழ்ந்து மூழ்கின
ராகக் களித்து மனமுவந்தே
தானந் தவங்களும் வேண்டிய மட்டி லுந்
தான்புரிந் தான்புவ னேந்திரனும். (441)

சிற்சில நாளிப் படியிருக்க நல்ல
தினத்தி விளவர சேகொடுக்க
நற்சிலர் கூடியே சிற்றர சர்களை
நாடியே யங்கு வரவழைத்தார். (442)

சீரைம்பத் தைந்து நகரா சர்மிகச்
சிறப்ப தாய்வந்து கூடினர்கள்
தீரமாய் நகரைய லங்கரித் துப்பட்டஞ்
செய்தன ராமந்த நற்றினமே. (443)

பட்டந் தரித்தயல் மாநக ரார்வெகு
பட்ச முடன்றுதித் தேபணிந்தே
திட்டமா யாவருஞ் சென்றூர் கள்புகழ்ந்
தெங்கெங்குங் கீர்த்தி துலங்கிடவே. (444)

அண்ணல் புகழும் விரிஞ்ச நகருக்
கதிபதி யாம்விரிஞ் சாதிபதி
நன்னய மாக வமைச்சனை டெய்தி
நடந்தன யாவுஞ் சொலக்கேட்டு. (445)

தன்சுதை யென்று சொலத்தெரிந் துபட்ட
தாய்மரம் பின்பு தழைத்ததுபோல்
முன்வெகு நாளினிற் றப்பிய மாகிளி
முழுதுந் தேடிப்பின் வந்ததுபோல். (446)

கண்டு மனமகிழ்ந் தேபுகழ்ந் துமுன்பின்
காரிய மெல்லாஞ் சொலக்கேட்டு
விண்டு தன்மகள் மருமகன் றன்னிடம்
விளம்பி யேக விடைகேட்டு. (447)

சென்றனன் மாவிரிஞ் சாதி பதிபரித்
தேர்நடத் திமிகத் தாட்டிகமாய்
நன்றெனப் பேசி நகர்சேர்ந்து சொந்த
நாயகி யிடத்திற் புகன்றிருந்தான். (448)

கதிர்மதி போன்முகப் புவனேந் திரனுங்
காவலன் றன்னோ டமைச்சர்களுந்
ததியறப் படியே யாறிலோர் பங்கு
தந்திடப் பெற்று மகிழ்ந்திருந்தார். (449)

மாதமும் மாரி பொழிந்திட வேயந்த
மாநக ருள்ளவர் யாவர்களுங்
கீத சுரதாள மேளத் துடன்மிகக்
கேளிக்கை யோடு மகிழ்ந்திருந்தார். (450)

சீர்புவ னேந்திர மாநகர் நீதி
செலுத்தி யாள்புவ னேந்திரனும்
பேர்பெறும் புத்தி சிகாமணி யும்முள்ள
பேர்களு மூர்களுந் தான்வாழி. (451)

பூலோக ரம்பை யுடனு கவவள்
புத்திரன் மெய்த்தவ னும்வாழி
சாலோக சாமீப சாரூப சாயுச்சியந்
தருஞ்சிவன் யானை முகன்வாழி. (452)

பூவுல கமதைத் தானளந் தவரி
பூரணன் மாய னடிவாழி
பூவி லவதரித் தேவளர்ந் தசிவ
பொன்னிறத் தாமரை யன்வாழி. (453)

கந்த னிருசர ணம்வா ழிதிருக்
காவலர் பாவலர் வாழிவாழி
சிந்தையுள் வைத்துப் படித்தவர் கேட்டவர்
சென்மசா பல்யமும் வாழியவே. (454)

புவனேந்திரன் கும்மி
முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!